# கமநல சேவைகள் மற்றும் வனசீரவாசிகள் பற்றிய அமைச்சு

# 2012

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

**(2012.01.01 - 2012.12.31 வரை)**


கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் பற்றிய
அமைச்சு
'கொவிஜன மந்திரய'
இலக்கம் 80/ 5, ரஜமல்வத்த ஒழுங்கை
பத்தரமுல்ல.



**மகிந்த சிந்தனைத் தூரநோக்கு**

- 2001 - 2004 வரை அரசாங்கம் நிரப்புவதற்கென நடவடிக்கை எடுத்த காணிகள் 'தரிசு நிலங்கள் விளைபயனாக்கல்' என்ற திட்டத்தின் கீழ் மீளப்பயிரிடும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே 150,000 ஏக்கர் காணிகள் விளைபயனாக்கப்பட்டுள்ளன. அதே போன்று மேலும் 150,000 ஏக்கர் காணிகளை மீண்டும் விளைபயனாக்க நான் இலக்குக் கொண்டுள்ளேன்.
- தற்பொழுது அரசாங்கத்தினால் 350 ரூபாவுக்கு வழங்கப்படுகின்ற ஒரு பசளை உறையை ஒவ்வொரு விவசாயிக்கும் திறந்த சந்தையில் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பசளை விநியோகத் திட்டத்தை மாற்றியமைக்கவுள்ளேன். அதனால் தற்பொழுது பசளை விநியோகத்தில் ஏற்படுகின்ற முறைகேடுகளை ஒழிக்க முடியும். அது மாத்திரமன்றி ஒவ்வொரு விவசாயிக்கும் தற்பொழுது நெல், மரக்கறி ஆகியவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பசளை நிவாரணத் திட்டத்தை ஏனைய பயிர்களுக்கும் 350 ரூபாவுக்குப் பெற்றுக் கொள்ளும் வகையில் திருத்தியமைப்பேன்.
- இலங்கையில் குத்தகை விவசாயிகளின் எதிர்கால சந்ததியினர் எதிர்நோக்கியிருக்கும் நிர்க்கதிகளுக்கு ஒரு நிலையான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எனது அபிலாஷையாகும். அதற்குத் தேவையான சட்டதிட்டங்களை தாமதியாது தயாரித்து வழங்குவேன்.
- சேதனப் பசளையின் பாவனையையும் அதன் உற்பத்தியையும் மேலும் ஊக்குவிப்பேன்.
- பசளை மற்றும் இரசாயனத் திரவம் என்பவற்றின் பாவனையை சுற்றாடல்நேய விதத்தில் ஆக்குவதற்குத் தேவையான சட்ட வரையறைகளை வலுப்படுத்துவேன்.
- விவசாய வங்கிக் கடன் திட்டத்தை மேலும் வலுப்படுத்தி விவசாயிகளுக்குத் தேவையான சகல கடன்களையும் விவசாய வங்கிக் கடன் திட்டத்தின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
- நெல் மற்றும் ஏனைய உணவுத் தானியங்களை பயிர்ச்செய்கை முடிவின் போது சந்தைக்கு விநியோகிக்கும் வாய்ப்பை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு வீட்டு மட்டத்தில் சிறிய களஞ்சியசாலைகளை அமைக்கும் ஒரு வேலைத்திட்டத்தை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து வைப்பேன்.
- கடந்த பல தசாப்தங்களாக நிலவி வந்த முறையற்ற அபிவிருத்தி மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் காரணமாக எமது தேசிய வனப் பூங்காக்கள் அழிந்து சென்றதால் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து யானை-மனிதன் என்ற பிரச்சினையைத் தோற்றுவித்தன. இதற்கு ஒரு பரிகாரமாக 2009 ஆம் ஆண்டில் 'கஜமித்துரோ' என்ற நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தினேன். அதனால் யானைகள் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் மற்றும் யானைகளுக்கான வேலிகள் அமைத்தல் முதலிய செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டன. கடந்த இரண்டு வருடங்களுள் மாத்திரம் 600 கிலோ மீற்றர் நீளமான மின்சார வேலிகளை நிர்மாணித்து நவீனப்படுத்தச் செய்தேன். வட கிழக்குப் பிரதேசங்கள் அடங்கலாக இந்தப் பிரச்சினைக்கு முகம்கொடுக்கின்ற சகல கிராம வாசிகளுக்கும் மின்சார வேலிகள் அமைக்கும் பணிகளை எதிர்வரும் மூன்று வருட காலத்திற்குள் நிறைவு செய்வேன்.
- பயங்கரவாதத்தினால் அழிந்து போன வில்பத்து, குமண, யான்ஓயா, சுண்டிக்குளம் போன்ற சகல சரணாலயங்களையும் நவீனப்படுத்தி எதிர்வரும் ஆண்டுகளில் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
- அரிதாகிச் செல்கின்ற விலங்கு இனங்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் 2600 மில்லியன் ரூபா செலவில் புதிய ஒரு கருத்திட்டத்தை 2010 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தி வருகின்றேன்.

**மகிந்த ராஜபக்ஷ**
**கமநலசேவைகள் மற்றும் வன சீவராசிகள் பற்றிய அமைச்சர்**



## வலிமையான ஒரு தேசிய பொருளாதாரத்தை நோக்கி......

கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் பற்றிய அமைச்சின் 2012 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையை வெளியிடுவதன் நிமித்தம் ஒரு ஆசிச் செய்தியை விடுப்பதற்கு எனக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை இட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வலிமையான ஒரு தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் விவசாயத் துறை விஷேட இடத்தை வகிக்கின்றது. புராதன காலம் தொட்டு சுய தேவையுடைய விவசாயப் பொருளாதார முறைமைக்கு உரிமை கோரி வந்த நாம் மஹிந்த சிந்தனைத் தூரநோக்குத் திட்டத்தினுள் விவசாயத் துறையின் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைவதற்கு பல விஷேட நிகழ்ச்சித்திட்டங்களை இந்த வருடத்தினுள் செயற்படுத்தினோம். நாட்டின் பல பிரதேசங்களிலும் காணப்படுகின்ற தரிசு நிலங்களை விளைபயனாக்கல் மற்றும் பசளை நிவாரணம் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதனூடாக விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவித்து தேசிய நெல் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உலகில் அரிசியை விநியோகிக்கும் நாடுகளின் பட்டியலில் எங்களுடைய நாட்டையும் உள்ளீர்க்க முடிந்தமை நாங்கள் பெற்ற பெரும் வெற்றியாகும். அதே போன்று ஏனைய பயிர்களுக்கும் பசளை நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கும், உணவில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்கும் பங்களிக்க முடிந்துள்ளமையையும் நாம் பெற்ற ஒரு வெற்றி எனக் குறிப்பிடலாம். பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கிடைக்கும் நிதியின் மூலம் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைத்தும் அதே நேரம் குளங்களை ஆழமாக்கும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியும் அமைச்சுக்கு வினைத்திறன் வாய்ந்த விதத்தில் நீர் முகாமைத்துவத்தைப் பேணி பிரதான விவசாய உற்பத்திகளுக்கும் ஏனைய பயிர்களுக்கும் தேவையான நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவும் முடிந்துள்ளது.

நாட்டின் தேசிய உற்பத்தி அளவை அதிகரிப்பதற்குப் பங்களிக்கும் அதே நேரம் வன சீவராசிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பல்லுயிரினங்களின் சமநிலையைப் பேணி யானை-மனிதன் என்ற பிரச்சினையைக் குறைப்பதும், வன சீவராசிகளினால் விவசாயிகளுக்கும், விவசாய நிலங்களுக்கும் மற்றும் சொத்துக்களுக்கும் ஏற்படுகின்ற அழிவுகளைக் குறைப்பதும் எமது அமைச்சின் முக்கிய ஒரு பொறுப்புப் பணியாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து உயர்ந்த ஒரு வருமானத்தை ஈட்டும் நிமித்தம் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் 'கஜமித்துரோ' என்ற நிகழ்ச்சித்திட்டம், ஹொரவ்பொத்தான-லுனுகம்வெஹர காட்டு யானைகள் தடுப்பு நிலையம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல், வில்பத்து அடங்கலாக தேசிய வனப் பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட பல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

நாம் எதிர்கொள்ளுகின்ற சவால்களை வெற்றிகொள்ளுவதற்கு நிதமும் அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி வருகின்ற மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கும், இந்த அமைச்சை சரியான பாதையில் இட்டு தேவையான வழிகாட்டலை வழங்கி வருகின்ற செயலாளருக்கும், அமைச்சின் பதவியணியினருக்கும், அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களினதும் மற்றும் ஏனைய நிறுவனங்களினதும் பதவியணியினருக்கும் மற்றும் இந்தப் பணியை நிறைவேற்றுவதற்குப் பங்களிப்பை நல்கிய சகல ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**எஸ்.எம். சந்திரசேன**

**கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் பற்றிய பிரதி அமைச்சர்**

**செயலாளரிடமிருந்து......**



முழு உலகத்தினதும் உணவு பாதுகாப்புக்கான வேலைத்திட்டங்கள் அவற்றின் நிகழ்ச்சி நிரலில் முதலிடத்தை வகித்துள்ள விஷேடமான ஒரு காலப்பகுதியில் விவசாயத் துறையும் முதலிடம் வகிப்பது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மஹிந்த சிந்தனைத் தூரநோக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் விவசாயத் துறையின் இலக்கை அடைவதற்கு கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் பற்றிய அமைச்சு உன்னதமான ஒரு பங்களிப்பைச் செய்து வருகின்றது.

தரிசு நிலங்கள் விளைபயனாக்கல் திட்டத்தின் கீழ், இலங்கை முழுதிலும் வசிக்கின்ற விவசாயிகளுக்கு, நெல் உற்பத்தியின் அளவை அதிகரிப்பதனூடாக சந்தைப் பொருளாதாரத்தினுள் உற்பத்தித் திறனைப் பேண முடிந்துள்ளது. கமநல சேவை நிலையங்கள் புனர்நிர்மாணம், புதிய கமநல சேவை நிலையங்கள் நிர்மாணம், விவசாய வங்கித் திட்டத்தை மேலும் வலுப்படுத்தி விவசாயிகளின் எதிர்கால நிலையை வலிமைப்படுத்துவதற்கான கருத்திட்டங்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டுள்ளன. உலகச் சந்தையில் பசளையின் விலை 9000 ரூபாவுக்கு அதிகாமாக இருந்தபோதிலும் விவசாயிகளுக்கு பசளை நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டங்கள் தேசிய உரச் செயலகத்தினூடாக நாடு முழுதிலும் பரந்திருக்கின்ற 557 கமநல நிலையங்களின் மூலம் தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதே போன்று, மேலதிகப் பயிர்களுக்கும் இந்த வருடம் முதல் பசளை நிவாரணத்தை வழங்கி விவசாயிகளை வலுப்படுத்தும் வேலைத் திட்டங்கள் மேலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சிறிய நீர்ப்பாசனத் திட்டப் புனரமைப்பு, குளங்களை ஆழமாக்கல் ஆகிய நடவடிக்கைகளினூடாக உயர்ந்த ஒரு நீர்ப்பாசன முகாமைத்துவத்தைப் பேணி வருடம் முழுதிலும் விவசாய உற்பத்திற்குத் தேவையான நீர்ப்பாசன வசதியை வழங்குவதன் மூலம் விவசாய உற்பத்தியின் சமநிலையைப் பேணுதவற்கும் முழுப் பொருளாதாரத்தையும் வலுப்படுத்துவதற்கும் அதே நேரம் உன்னதமான ஒரு பங்களிப்பை நல்குவதற்கும் எம்மால் முடிந்துள்ளது.

பல்லுயிரினத்தன்மையில் உலகத்தின் உயர் மட்டத்திலிருக்கின்ற 25 நாடுகளுக்கு இடையில் இடம்பிடித்துள்ள எமது நாடு உலகத்தின் ஏனைய நாடுகளை விஞ்சுகின்ற இயற்கை வளங்கள் நிறைந்த ஒரு எளில்மிகு நாடாகும். இலங்கையின் முழு நிலப் பரப்பில் 14% வீதப் பொறுப்பு உரித்தாகியிருக்கின்ற வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் குரல் எழுப்ப முடியாத விலங்குகளின் உரிமைகள் தொடர்பில் முன்னிக்கின்ற ஒரு நிறுவனமாக விளங்குகின்றது.

யானை-மனிதன் என்ற பிரச்சினை மற்றும் விலங்குகளினால் விவசாயிகளின் விவசாய நிலங்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படும் அழிவுகள் ஆகியவற்றைக் குறைப்பதற்கும் 2006 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட இலங்கையின் காட்டு யானைகள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான தேசிய கொள்கை மூலம் தேசிய மற்றும் சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைவாக பல்லுயிரினத்தன்மையைப் பாதுகாக்கின்ற விதத்தில் வன விலங்குகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், கஜமித்துரோ என்ற கருத்திட்டத்தைச் செயற்படுத்துதல், யானைகள் கட்டுப்பாட்டுப் பிரிவுகளைத் தாபித்தல், நவீன மின்சார வேலிகளை அமைத்தல் என்பவற்றின் மூலம் நாம் உன்னதமான ஒரு செயற்பணியில் ஈடுபட்டு வருகின்றோம்.

தேசிய பூங்காக்கள் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு என்பவற்றின் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்ததால் அந்நியச் செலாவணியை எமக்கு அதிகரிக்க முடிந்துள்ளது.

இலங்கையை ஆசியாவின் ஒரு அபிமான நாடாக மாற்றும் தேசிய கருப்பொருளுக்கு இந்த அமைச்சின் பங்களிப்பை உயர்ந்த அளவில் பெற்றுக் கொடுக்கும் நிமித்தம் அமைச்சின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுகையில் எப்பொழுதும் வழிகாட்டியும் ஆலோசனையை வழங்கியும் வருகின்ற கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் பற்றிய அமைச்சர் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கும், பிரதி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்கவும் மற்றும் அமைச்சின் பதவியணிக்கும் அதனுடன் இணைந்த திணைக்களங்களின் ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவும் விரும்புகின்றேன். இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட ஊழியர்களுக்கும் அதே நேரம் தகவல்கள் மற்றும் தரவுகள் என்பவற்றை வழங்கிய அலுவலர்களுக்கும், மொழிபெயர்ப்புச் செய்த அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**பொறியியலாளர் உதேனி விக்ரமசிங்க**

**செயலாளர்**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் பற்றிய அமைச்சு | 11 |
| அபிவிருத்திப் பிரிவு | 13 |
| நிருவாகப் பிரிவு | 20 |
| நிதிப் பிரிவு | 23 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 25 |
| விசாரணைப் பிரிவு | 26 |
| சட்டப் பிரிவு | 27 |
| கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 29 |
| வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 41 |
| தேசிய உரச் செயலகம் | 55 |
| வ/ப இலங்கை உரக் கம்பனி | 65 |
| வ/ப கொழும்பு வர்த்தக உரக் கம்பனி | 77 |
| வ/ப மக்கள் உரத் தொழில்முயற்சி | 83 |
| இலங்கை வன சீவராசிகள் பொறுப்பு நிதியம் | 87 |

# கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் பற்றிய அமைச்சு

## தூரநோக்கு

“விளைதிறனுடைய விவசாயக் காணிகள், பயிர்ச்செய்கை, வளமான விவசாய சமூகம் வன சீவராசிகள் உரிமைகள் என்பவற்றைப் பாதுகாத்தல்”


## செயற்பணி

“ஒரு விவசாயத் தொழில் முகாமைத்துவத்தைப் பேணி அனைவரும் ஒன்றிணைந்து உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை நோக்கி விவசாயக் காணிகளிலிருந்து உச்ச விளைதிறனைப் பெற்றுக் கொள்ளுவதற்கு தரமான விவசாய சேவைகளை வழங்குதல், வினைத்திறன் வாய்ந்த நீர்ப்பாசன முகாமைத்துவம் மற்றும் விவசாயிகளின் கூட்டு சக்தியை வலுப்படுத்தல் ஆகியவற்றினூடாக விவசாயிகளை விவசாயத்தில் ஈடுபடச் செய்வதற்கும், அதே நேரம் பயனுள்ள ஒரு வன சீவராசிகள் பாதுகாப்பு வலையமைப்பைப் பேணுவதன் மூலம் பல்லுயிரினத்தன்மையைப் பாதுகாப்பதற்கும், சுற்றாடல் விடயங்களை மேம்படுத்துவதற்கும், யானை-மனிதன் என்ற பிரச்சினையைக் குறைப்பதற்கும் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்து அதனை செயற்படுத்துதல்”

## முக்கிய கருமங்கள்

- கமநல சேவைகள் பற்றியதும் மற்றும் வன சீவராசி வளங்கள் பாதுகாப்புக்கும் பொருத்தமான கொள்கைகளைத் தயாரித்தலும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தச் செய்தலும்
- மஹிந்த சிந்தனை என்ற தேசிய விவசாயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான உள்நாட்டு உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமைச்சுடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றினூடாக செயற்படுத்தச் செய்தல்.
- சிறிய நீர்ப்பாசன புனரமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகிய நடவடிக்கைகளின் செயற்படுத்துகை பற்றிக் கண்காணித்தல்.
- 1988 இன் 68 ஆம் இலக்கப் பசளை ஒழுங்குறுத்தல் சட்டத்தின் செயற்படுத்துகை பற்றிக் கண்காணித்தல்.
- பசளை நிவாரணத் திட்டத்தைச் செயற்படுத்தச் செய்தல்.
- சர்வதேச வன சீவராசிகள் சமவாயத்தைச் செயற்படுத்தச் செய்தல்.
- உரிய திணைக்களங்களின் செயல் திட்டங்களில் அடங்கியிருக்கின்ற விடயங்களை மாதாந்தம், காலாண்டு, வருடாந்தம் என்ற அடிப்படையில் மதிப்பிடுதல், செயற்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.

# அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களும் நிறுவனங்களும்



# அபிவிருத்திப் பிரிவு

**திவி நெகும நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய விபரம்**

| கருத்திட்டம் | 25 மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்ட இலக்கு | 2012.12.31 ஆம் திகதிக்கான பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| பாதுகாப்பான கூடாரங்களினுள் வர்த்தகப் பயிர்களின் பயிச்செய்கை | 100 | 62 |
| பூக்கள் பயிர்ச்செய்கைக் கருத்திட்டம் | 200 | 148 |
| தேனீ வளர்ப்பு | 5000 | 2413 |
| மாட்டுத் தொழுவங்கள் நிர்மாணம் | 1000 | 586 |
| 5 பயிர் வகைகளில் தன்னிறைவு அடைதல் | 10000 (ஏக்கர்) | 3547 |

**2012.12.31 திகதிக்கு மாவட்டத்திற்கான விதைகள் பகிர்ந்தளிப்பு பற்றிய முன்னேற்றம்**

| திவி நெகும கட்டம் III இன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட விதைப் பொதிகளின் எண்ணிக்கை | திவி நெகும கட்டம் IV இன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட விதைப் பொதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2076983 | 5004691 |

## வயல் காணிகளை வேறு கருமங்களுக்காகப் பயன்படுத்துதல் / ஒரு வயல் காணியல்லாத ஒரு உறுதிப்பத்திரத்தை வழங்குதல் (2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் பற்றிய விபரம்)

| தொடர் இலக்கம் | மாவட்டம் | 2012.12.31 ஆம் திகதிக்கு வழங்கப்பட்ட உறுதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | ஒரு வயல் காணியை வேறு கருமங்களுக்காகப் பயன்படுத்துதல் | வயல் காணியல்லாத ஒரு உறுதிப்பத்திரத்தை வழங்குதல் |
| 1 | கொழும்பு | 08 | 15 |
| 2 | கம்பஹா | 09 | 04 |
| 3 | களுத்துறை | 07 | 03 |
| 4 | கண்டி | 77 | 21 |
| 5 | மாத்தளை | 04 | 03 |
| 6 | நுவரெலியா | 03 | 01 |
| 7 | காலி | 01 | - |
| 8 | மாத்தறை | 03 | - |
| 9 | அம்பாந்தோட்டை | - | 01 |
| 10 | குருனாகல் | 07 | - |
| 11 | புத்தளம் | 01 | 01 |
| 12 | அனுராதபுரம் | 01 | - |
| 13 | பொலன்னறுவை | 01 | - |
| 14 | பதுளை | 12 | 07 |
| 15 | மொனராகலை | - | - |
| 16 | இரத்தினபுரி | 09 | - |
| 17 | கேகாலை | 07 | 02 |
| 18 | மட்டக்களப்பு | - | - |
| 19 | அம்பாறை | - | - |
| 20 | திருகோணமலை | 01 | - |
| 21 | யாழ்ப்பாணம் | - | - |
| 22 | வவுனியா | - | - |
| 23 | முல்லைத்தீவு | - | - |
| 24 | மன்னார் | - | - |
| 25 | கிளிநொச்சி | - | - |

# கமக்காரர் பொறுப்பு நிதியம் - 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்ற விபரம்

| தொடர் இலக்கம் | விபரம் | தொகை (ரூ.) | செலவு (ரூ.) | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | பசளைக் களஞ்சியசாலை நிர்மாணம் | | | |
| | • அம்பாந்தோட்டை - உடயால | 312,500.00 | 312,500.00 | 100 |
| | • பொலன்னறுவை - புதிய நகரம் | 1,250,000.00 | 1,250,000.00 | 100 |
| | - மன்னம்பிட்டி | 1,250,000.00 | 1,250,000.00 | 100 |
| | - பக்கமுண | 1,250,000.00 | 1,250,000.00 | 100 |
| 2 | விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - வட பகுதி | | | |
| | • கமக்காரர் அமைப்புகளுக்கு முள்ளுக்கம்பிகளை விநியோகிக்கும் வகையில் கசேநி இற்கு நிதி உதவி வழங்குதல் | 4,000,000.00 | 4,000,000.00 | 100 |
| | • மீளக்குடியேறிய 5000 விவசாயிகளுக்கு மண் வெட்டிகளைப் பகிர்ந்தளிப்பதற்காக 15 கசேநி இற்கு நிதி உதவி வழங்குதல் | 4,000,000.00 | 4,000,000.00 | 100 |
| | • மீளக்குடியேறிய 275 விவசாயிகளுக்கு வாய்க் கால்களைப் புழுதுபார்த்துக் கொள்ளுவதற்கான உபகரணங்களுக்காக கசேநி இற்கு நிதி உதவி வழங்குதல் | 2,750,000.00 | 2,750,000.00 | 100 |
| 3 | அம்பாறை மாவட்ட 2 விவசாய வீதிகள் நிர்மாணம் சார்ந்த நிகழ்ச்சித்திட்டம் | | | |
| | • கைத்தியடி குளக்கட்டு வீதி | 1,845,591.20 | 1,360,510.00 | 100 |
| | • வம்மச்சோலை வெட்டை வீதி | 1,991,930.90 | 1,749,390.00 | 100 |
| 4 | திருகோணமலை மாவட்ட விவசாய வீதிகள் நிர்மாண நிகழ்ச்சித்திட்டம் | | | |
| | • கள்ளம்பற்று விவசாய வீதி | 1,494,425.04 | 1,448,481.60 | 100 |
| | • சுங்கான்குளி விவசாய வீதி | 1,966,009.35 | 1,949,212.09 | 100 |
| 5 | கொம்பெத்தல பன்சலையை அண்மித்த பாதுகாப்பு அணை மற்றும் விவசாய வீதிகள் நிர்மாணம் | 1,000,000.00 | 1,000,000.00 | 100 |

| தொடர் இலக்கம் | விபரம் | தொகை (ரூ.) | செலவு (ரூ.) | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 6 | ப்ளாஸ்டிக் கூடைகள் விநியோக நிகழ்ச்சித்திட்டம்<br>• பதுளை<br>• நுவரெலியா | 1,761,750.00<br>2,499,749.89 | 156,900.00<br>பதிவாகியில்லை<br>- | 100<br>100 |
| 7 | க.சே.நி பழுதுபார்ப்புகள்<br>• மூதூர் - திருகோணமலை<br>• கொக்கடிச்சோலை - மட்டக்களப்பு | 1,834,581.25<br>1,077,020.32 | 941,314.76<br>1,077,020.32 | 100<br>100 |
| 8 | அனுராதபுர மாவட்ட விவசாயக் கிணறுகள் கருத் திட்டம் | 20,000,000.00 | 20,000,000.00 | 100 |
| 9 | கிராமிய சிறிய நீர்ப்பானத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டம்<br>• மாத்தறை<br>• கண்டி<br>• குருனாகல்<br>• மன்னார்<br>• முல்லைத்தீவு<br>• வவுனியா<br>• அனுராதபுரம் | 3,000,000.00<br>3,000,000.00<br>4,421,908.00<br>262,440.00<br>3,880,284.95<br>6,368,385.60<br>6,258,189.33 | 2,133,193.00<br>பதிவாகியில்லை<br>4,418,758.00<br>262,440.00<br>3,851,915.37<br>4,312,378.75<br>2,342,671.63 | 25<br>25<br>100<br>100<br>100<br>100<br>100 |

# திட்டமிடல் பிரிவு

- 2011 - 2015 கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் காலாண்டு ரீதியான முற்போக்கு மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- மஹிந்த சிந்தனைத் தூரநோக்குத் திட்டத்திற்கு அமைய கமநல சேவைகள், வன சீவராசிகள் மற்றும் பசளை ஆகிய பிரிவுகளுக்குரிய முன்னேற்றத்தை அடைவதற்குத் தேவையான செயலாற்றுகை சார்ந்த சுட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- 2013 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவுகள் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
- 2013 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்திற்கு இணையாக நடாத்தப்பட்ட கூட்டங்களில் கலந்துகொண்டு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- 2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையைத் தயாரிப்பதற்கு கமநல சேவைகள், வன சீவராசிகள் மற்றும் பசளை ஆகிய பிரிவுகள் தொடர்பான தகவல்கள் இலங்கை மத்திய வங்கிக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- 50 மில்லியன் ரூபா பெறுமதிக்கு அதிகமான கருத்திட்டங்களின் நான்கு காலாண்டுகளினதும் முன்னேற்றம் பற்றி நிதி அமைச்சுக்குக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- அமைச்சின் செலவினத் தலைப்பு விடயத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வேளையில், பெற்றுக் கொடுக்கும் 2012 ஆம் ஆண்டிற்கான முன்னேற்றமும் எதிர்வரும் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டங்களும் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- 2012 ஆம் ஆண்டு அனுராதபுர மாவட்டத்தில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் என்ற தேசிய அபிவிருத்திக் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.
- 2011 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய திணைக்களத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.
- 2013 ஆம் ஆண்டிற்கான தேசத்திற்கு மகுடம் என்ற அபிவிருத்தி மற்றும் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பூர்வாங்கப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

# பொறியியல் பிரிவு

### சிறிய நீர்ப்பாசன நீர் வள முகாமைத்துவப் பணிகள்

- சிறிய நீர்ப்பாசனம் தொடர்பில் கிடைத்த 58 முறைப்பாடுகளை விசாரிப்பதற்குத் தேவையான அறிவுரைகளை வழங்கி உரிய நிறுவனங்களுக்குக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- வரட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் குளங்கள் மற்றும் விவசாயக் கிணறுகள் என்பவற்றைப் புனரமைக்கும் நிமித்தம் ஏறக்குறைய 500 மில்லியன் ரூபா நிதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இருந்து பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- பல கருமங்களுக்கும் பயன்படுத்தக்கூடிய நடுத்தர அளவான நீப்பாசனத் திட்டங்களைப் புனரமைக்கும் நிமித்தம் 216 மில்லியன் ரூபா நிதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இருந்து பெற்றுக் கொள்ளுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- சிறிய நீர்ப்பாசனங்களின் நிலையான அபிவிருத்தியின் நிமித்தம் கொள்கலன்களைக் கொள்வனவு செய்வதற்காக 93 மில்லியன் ரூபா நிதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இருந்து பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- குடிநீர் கருத்திட்டங்கள் மற்றும் விவசாயக் கிணறுகள் சார்ந்த கருத்திட்டங்கள் என்பவற்றுக்கான நிதியை பொருளாதார அமைச்சில் இருந்து பெற்றுக் கொள்ளுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- பின்வரும் மாவட்டங்களின் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைக்கும் நிமித்தம் தேவையான நிதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இருந்து பெற்றுக் கொள்ளுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

| மாவட்டம் | சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மாத்தறை | 23 |
| கம்பஹா | 339 |
| அனுராதபுரம் | 183 |
| கொழும்பு | 56 |

- நீர் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பில் உரிய நிறுவனங்களின் மூலம் நடாத்தப்படும் கூட்டங்களிலும் வேலையரங்குகளிலும் பங்குபற்றல் இடம்பெற்றுள்ளது.

### பொறியியல் விடயங்கள்

- 8,24,300.00 ரூபா நிதியைச் செலவிட்டு 2012 ஆம் ஆண்டு அமைச்சுக்குரிய சகல பராமரிப்பு விடயங்களும் உரிய விதத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- அமைச்சின் கட்டிடத்தில் மின்சாரம், நீர் விநியோகம், துப்புரவேற்பாடு, பராமரிப்பு முதலிய விடயங்கள் தொடர்பில் 2012 ஆம் ஆண்டு 61,325 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- இந்த அமைச்சின் அலுவலக அறைகளுக்கு 40 குளிரூட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் குளிரூட்டிகள் ஒரு வருடத்திற்கு மூன்று தடவைகள் சேவிஸ் பண்ணப்படுகின்றன. சேவை ஒப்பந்தத்தைச் செய்வதற்கு இந்த ஆண்டில் 117,757.36 ரூபா தொகை செலவிடப்பட்டுள்ளது.

- 13 தொலைநகல்களை சேவிஸ் பண்ணுவதற்காக 2012 ஆம் ஆண்டு தொடர்பில் 25442.20 ரூபா தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு 04 தடவைகள் சேவிஸ் பண்ணப்பட்டுள்ளன.

- அமைச்சின் 13 புகைப்படப் பிரதியெடுக்கும் இயந்திரங்களின் சேவை ஒப்பந்தத்திற்கு 2012 ஆம் ஆண்டில் 138430 ரூபா தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு 04 தடவைகள் சேவிஸ் பண்ணப்பட்டுள்ளன.

- கணனிகளின் பழுபார்ப்புப் பணிகள் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அமைச்சின் 35 கணனிகளை இணைத்து ஒரு உள்ளகப் பிரிவு வலையமைப்பு முறைமை தாபிக்கப்பட்டது. அதன் மூலம் இன்டர்நெட் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்காக 395,016.79 ரூபா தொகை செலவிடப் பட்டுள்ளது.

- கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் பற்றிய அமைச்சுக்கு ஒரு உத்தியோகபூர்வ www.aswlmin.gov.lk என்ற இணையத்தளம் 2012.12.05 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதற்கு 190,000 ரூபா தொகை செலவிடப்பட்டது.

- மாதாந்தம் 6171.38 ரூபா தொகையைச் செலவிட்டு அமைச்சின் அலுவலர்களுக்கு 30 மின்னஞ்சல் முகவரிகள் வழங்கப்பட்டன.

## வனசீவராசிகள் பாதுகாப்பு விடயங்கள்

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்ககளம் தொடர்பில் கிடைத்த 33 பொது முறைப்பாடுகள் பற்றி விசாரிப்பதற்காக அந்த முறைப்பாடுகள் உரிய பிரிவுக்குக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
- வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் தொடர்பில் வெளிக்கள நபர்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் இடையில் நிலவிய 09 பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நிமித்தம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தேசிய வனப் பூங்காக்களில் குளங்கள் பனரமைப்புக்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் ஒன்றிணைந்த ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தி அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தச் செய்யும் நிமித்தம் தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சு உதவிகளை வழங்கியுள்ளது.
- காட்டு யானைகளினால் ஏற்படுகின்ற அழிவுகளைக் குறைப்பதற்காக யானைகள் தடுப்பு நிலையத் தாபிப்புத் திட்டத்தின் கீழ் ஹொரவப்பொத்தான காட்டு யானைகள் தடுப்பு நிலையத்தை நிர்மாணிப்பது தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டது.
- வனசீவராசிகள் பற்றி ஏனைய அமைச்சுகளினால் முன்வைக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டு அவை முன்வைக்கப்பட்டுள்ளன.
- காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் மக்களுக்காகத் தயாரிக்கப்படுகின்ற காப்புறுதித் திட்டம் பற்றி பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, தேசிய திட்டமிடல் திணைக்களம், வரவுசெலவுத் திட்டமிடல் திணைக்களம், கமக்காரர் காப்புறுதிச் சபை என்பவற்றுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு உரிய விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

# நிருவாகப் பிரிவு

**2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்**

- அமைச்சுகள் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் பற்றிய அமைச்சு கமத்தொழில் அமைச்சிலிருந்து பிரிக்கப்பட்டு தனியாக 2010.11.22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைச்சின் முழுமொத்தப் பதவியணி இது வரை ஏறக்குறைய 220 அலுவலர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்தப் பதவியணிகள் தொடர்பான விடயங்கள், வன ஆண்டு சம்பள ஏற்றங்களைச் செலுத்துதல், சேவையில் நிரந்தரமாக்கல், வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளை நடாத்துதல், ஓய்வூதியச் சம்பளங்களைத் தயாரித்தல் முதலிய விடயங்களை தாமதமின்றி நிறைவேற்றும் நிமித்தம் ஏற்கனவே தனியாள் கோவைகளில் நிலவிய குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- 2012 ஆம் ஆண்டில் மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் நிமித்தம் அமைச்சின் பதவியணியை கணனிப் பயிற்சிகள், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பயிற்சிகள் அதே போன்று விடயத்துடன் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் என்பவற்றுக்கு அனுப்பி வைப்பதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

- முகாமைத்துவ மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிருவாகப் பிரிவினது பணியாட்கள் மிகவும் இலகுவாகவும் சிறந்த முறையிலும் கடமைகளை மேற்கொள்ளும் வகையில் மறுசீரமைப்பு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மறுசீரமைப்பு விடய நடபடிமுறைகள் நிறைவு செய்யப் பட்டுள்ளன. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மறுசீரமைப்பு விடய நடபடிமுறைகள் இறுதிக் கட்டத்திலுள்ளன. 02 திணைக்களங்களுக்குப் பொருத்தமான 21 ஆட்சேர்ப்புத் திட்டங்களில் 04 திட்டங்கள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அத்தகைய 07 ஆட்சேர்ப்புத் திட்டங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியின் நிமித்தம் அந்த ஆணைக்குழுவுக்குக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையில் தரம் II/I இல் உள்ள பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு உள்ளக விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் திட்டத்திற்கு அமைய அந்தப் பதவிக்கு தகைமையுடைய 05 அலுவலர்களை அந்தப் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு நியமிப்பதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தில் 20 வருடங்களுக்கும் அதிகமான காலம் நியமணக் கடிதங்கள் இன்றி பணியாற்றிய கிராமிய சமூகவியலாளர், சுற்றாடல்வியலாளர் மற்றும் கல்விப் பயிற்சி அலுவலர் ஆகிய 03 பதவிகளிலுள்ள அலுவலர்களுக்கு முறையான நியமனக் கடிதங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் பெற்றுக் கொடுக்கச் செய்யப்பட்டுள்ளன.

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 34 நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பதவிகளும், 12 சாரதிப் பதவிகளும், ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் பதவியும், ஒரு சட்ட உதவியாளர் பதவியும் அனுமதிக்கச் செய்யப்பட்டுள்ளன.

- வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றுகின்ற கள ரீதியான கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு கஷ்ட மற்றும் ஆபத்துக் கொடுப்பனவுத் தொகையான 500 ரூபா தொகையை 2500 ரூபா வரை அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

- கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 2002 ஆம் ஆண்டு முதல் பதவியுயர்த்தப்படாத தொழில்நுட்பச் சேவை வகுப்பு I இல் உள்ள அலுவலர்களை விஷேட தரத்திற்குப் பதவியுயர்த்தும் நிமித்தம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

- கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் திணைக்களமயப்படுத்தப்பட்ட 21 உதவி ஆணையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிமித்தம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

- கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் தற்பொழுது அனுமதிக்கப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவையின் வகுப்பு II (உள்ளகக் கணக்காய்வாளர்) பதவியைத் தணிப்புச்செய்து விட்டு இலங்கைக் கணக்காளர் சேவை வகுப்பு I பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று அனுமதிக்கச் செய்யப்பட்டுள்ளது.

- பொது நிருவாகச் செயலாளருக்கு / அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்குக் குறிப்பீடு செய்யப்பட்டு அனுமதியைப் பெறவேண்டிய விடயங்கள் பற்றி ஒரு வாரத்திற்குள் ஆராய்ந்து அனுமதியைப் பெறுவதற்காக குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- தாமதம் நிலவுகின்ற ஒழுக்காற்று விசாரணைகளை விரைவில் நிறைவு செய்வதற்கு கால வரையறைகளை வழங்கி அதனைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் பிரிவுக்குக் கிடைக்கின்ற சகல கடிதங்கள் தொடர்பிலும் 07 நாட்களுக்குள் பதிலளித்து அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- வன சீவராசிகள் திணைக்களத்தில் திணைக்களமயப்படுத்தப்பட்ட பதவிகள் தொடர்பான வருடாந்த இடமாற்றக் கொள்கையை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் அனுமதிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### மனித வளங்களின் அபிவிருத்தி நிமித்தம் வழங்கப்பட்ட பயிற்சிகள்

பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு 2012 ஆம் ஆண்டு தொடர்பில் அனுமதிக்கப்பட்ட நிதித் தொகை இரண்டு இலட்சத்து எழுபத்து மூவாயிரம் ரூபா (ரூ.273,000.00) ஆக இருந்தது. அந்த வரையறுக்கப்பட்ட நிதித் தொகையின் கீழ் 2012 ஆம் ஆண்டினுள் மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் நிமித்தம் அலுவலர்கள் பல பயிற்சிப் பாடநெறிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இங்கு அலுவலர்களின் செயலாற்றுகை மற்றும் விளைதிறன் ஆகியவற்றை அதிகரிப்பதற்குத் தேவையான பயிற்சித் தேவைப்பாடுகளை இனங்கண்டு அதற்கிணங்க தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| பயிற்சி | பயிற்சியை வழங்கிய நிறுவனம் | பங்குபற்றிய அலுவலர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. ஆங்கிலச் சான்றிதழ் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 05 |
| 2. ICDL கணனிப் பாடநெறி | தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை | 20 |
| 3. நிறுவன அபிவிருத்திற்கு பதவியணியின் பங்களிப்பை ஊக்குவித்தல் | இலங்கை மன்றக் கல்லூரி | 01 |
| 4. அரசாங்கச் சம்பளக் கொடுப்பனவு முகாமைத்துவம் | மிலோதா நிறுவனம் | 01 |
| 5. நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | மிலோதா நிறுவனம் | 01 |
| 6. அரசாங்கத் திணைக்களங்களில் கணக்காய்வுப் பிரச்சினைகளை குறைத்துக்கொள்ளுவது எவ்வாறு | இலங்கை மன்றக் கல்லூரி | 03 |
| 7. தலைமைத்துவமும் குழு விருத்தியும் | தேசிய ஊழியர் கல்வி நிறுவகம் | 03 |
| 8. கொள்வனவு நடைமுறையின் முக்கியத்துவம் | இலங்கை மன்றக் கல்லூரி | 02 |
| 9. தமிழ் மொழி ஆற்றல் விருத்திப் பாடநெறி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 45 |

# நிதிப் பிரிவு

## 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்

**நிகழ்ச்சித்திட்டம் 01 - இயக்கச்செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**
**அமைச்சரின் அலுவலகம்**

| விபரம் | 2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு (ரூ.மில்.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ.மில்.) | 2012.12.31 ஆம் திகதிக்கான மொத்தச் செலவு (ரூ.மில்.) | % |
|---|---|---|---|---|
| | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | **20.11** | **20.83** | **20.63** | **99%** |
| தனியாள் வேதனாதிகள் | 8.25 | 7.75 | 7.65 | 99% |
| பிரயாணச் செலவுகள் | 1.20 | 0.68 | 0.65 | 96% |
| வழங்கல்கள் | 5.21 | 5.78 | 5.77 | 100% |
| பராமரிப்புச் செலவுகள் | 2.15 | 4.93 | 4.91 | 100% |
| சேவைகள் | 3.30 | 1.69 | 1.65 | 98% |
| **மூலதனச் செலவினம்** | **4.40** | **4.48** | **3.94** | **88%** |
| மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பும் மேம்பாடும் | 1.40 | 1.27 | 0.89 | 70% |
| மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | 3.00 | 3.21 | 3.05 | 95% |
| **மொத்தச் செலவு** | **24.51** | **25.31** | **24.57** | **97%** |

**நிகழ்ச்சித்திட்டம் 01 - இயக்கச்செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**
**கருத்திட்டம் 02 தாபன நிருவாக சேவைகள்**

| விபரம் | 2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு (ரூ.மில்.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ.மில்.) | 2012.12.31 ஆம் திகதிக்கான மொத்தச் செலவு (ரூ.மில்.) | % |
|---|---|---|---|---|
| | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | **43.79** | **41.25** | **41.20** | **100%** |
| தனியாள் வேதனாதிகள் | 25.30 | 26.16 | 26.15 | 100% |
| பிரயாணச் செலவுகள் | 1.25 | 0.72 | 0.70 | 97% |
| வழங்கல்கள் | 6.81 | 6.22 | 6.20 | 100% |
| பராமரிப்புச் செலவுகள் | 4.45 | 3.76 | 3.76 | 100% |
| சேவைகள் | 5.48 | 3.73 | 3.73 | 100% |
| அரசாங்கக் கடன் வட்டி | 0.50 | 0.66 | 0.66 | 100% |
| **மூலதனச் செலவுகள்** | **8.40** | **7.64** | **6.57** | **86%** |
| மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பும் மேம்பாடும் | 1.90 | 1.70 | 0.65 | 38% |
| மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | 6.20 | 5.64 | 5.63 | 100% |
| திறன் விருத்தி | 0.30 | 0.30 | 0.29 | 97% |
| **மொத்தச் செலவு** | **52.19** | **48.89** | **47.77** | **98%** |

**நிகழ்ச்சித்திட்டம் 02 - அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**
**கருத்திட்டம் 03 - கமநல சேவைகள்**

| விபரம் | 2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு (ரூ.மில்.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ.மில்.) | 2012.12.31 ஆம் திகதிக்கான மொத்தச் செலவு (ரூ.மில்.) | % |
|---|---|---|---|---|
| | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | **28.05** | **31.42** | **31.40** | **100%** |
| தனியாள் வேதனாதிகள் | 25.30 | 28.29 | 28.29 | 100% |
| பிரயாணச் செலவுகள் | 0.45 | 0.93 | 0.92 | 99% |
| வழங்கல்கள் | 0.90 | 1.49 | 1.49 | 100% |
| பராமரிப்புச் செலவுகள் | 0.30 | 0.30 | 0.29 | 97% |
| சேவைகள் | 1.10 | 0.41 | 0.41 | 100% |
| **மூலதனச் செலவினம்** | **2.63** | **2.39** | **2.10** | **88%** |
| மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பும் மேம்பாடும் | 0.18 | 0.18 | 0.01 | 1% |
| மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | 0.45 | 0.39 | 0.37 | 95% |
| முதலீடு–தேசத்திற்கு மகுடம் | 2.00 | 1.82 | 1.73 | 95% |
| **மொத்தச் செலவு** | **30.68** | **33.81** | **33.50** | **99%** |

**நிகழ்ச்சித்திட்டம் 02 - அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**
**கருத்திட்டம் 04 - பசளைச் சட்டத்தைச் செயற்படுத்துதல்**

| விபரம் | 2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு (ரூ.மில்.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ.மில்.) | 2012.12.31 ஆம் திகதிக்கான மொத்தச் செலவு (ரூ.மில்.) | % |
|---|---|---|---|---|
| | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | **33826.41** | **36482.57** | **36482.34** | **100%** |
| தனியாள் வேதனாதிகள் | 20.00 | 20.00 | 19.99 | 100% |
| பிரயாணச் செலவுகள் | 0.30 | 0.68 | 0.68 | 100% |
| வழங்கல்கள் | 0.61 | 0.66 | 0.65 | 99% |
| பராமரிப்புச் செலவுகள் | 0.20 | 0.61 | 0.60 | 98% |
| சேவைகள் | 5.30 | 4.18 | 3.98 | 95% |
| மாற்றல்கள் (பசளை நிவாரணம்) | 33800.00 | 36456.44 | 36456.44 | 100% |
| **மூலதனச் செலவினம்** | **130.12** | **118.41** | **74.69** | **63%** |
| மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பும் மேம்பாடும் | 0.17 | 0.17 | 0.08 | 47% |
| மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | 4.95 | 0.45 | 0.44 | 98% |
| சேதனப் பசளை | 125.00 | 117.79 | 74.17 | 63% |
| **மொத்தச் செலவு** | **33956.53** | **36600.98** | **36557.03** | **100%** |

# உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

**2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்**

- மாலபே, வீரவில, கலஹிட்டியாவ, நாகொட மற்றும் மிகிந்தலை ஆகிய கமநல சேவை நிலையங்களினதும் களுத்துறை கமநல சேவை மாவட்ட அலுவலகத்தினதும் உள்ளகக் கணக்காய்வு விடயங்கள் பரிசீலிக்கப் பட்டன.
- எம்பிலிப்பிட்டிய கமநல சேவை நிலையத்தின் பசளை இருப்பு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது (விஷேட கணக்காய்வு விசாரணை)
- வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான லுணுகம்வெஹர, கிழக்கு மற்றும் அனுராதபுரம் ஆகிய உதவிப் பணிப்பாளர் அலுவலகங்களின் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- உடவளவை தேசிய பூங்கா மற்றும் பாகாப்பு அலுவலகம், வில்பத்து மற்றும் லாஹுகல ஆகிய தேசிய சரணாலயங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமான வனப் பாதுகாப்பு அலுவலகங்கள் மற்றும் பாதுகாப்பு அலுவலகம் என்பவற்றின் கணக்காய்வு விடயங்கள் பரிசீலிக்கப்பட்டன.
- வ/ப கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் சிலர் சமர்ப்பித்த மனு தொடர்பில் விஷேட விசாரணை நடாத்தப்பட்டது.
- தும்முல்ல சுற்றுலா பங்களாக்கள் நிர்மாணம் தொடர்பான கணக்காய்வு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.
- வ/ப கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு விசாரணை அறிக்கையும் பசளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் சீப்புக்குளம் பசளைக் களஞ்சியசாலை நிர்மாணமும் பற்றிய கணக்காய்வு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.
- வ/ப கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனத்தில் விஷேட கணக்காய்வு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.
- கமநல சேவைகள் மற்றும் வச சீவராசிகள் பற்றிய அமைச்சின் உதவிப் பணிப்பாளர்களாக நியமனம் பெற்ற அலுவலர்களின் சம்பள அளவுத்திட்டக் கணிப்பீடுகள் பற்றி பரிசீலிக்கப்பட்டது.
- அமைச்சின் 2012 - சனவரி முதல் திசம்பர் வரை வாகனக் குட்டை வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டன.
- 2012 ஆம் ஆண்டிற்கான 4 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதன் மூலம் அமைச்சினதும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களினதும் சிறந்த ஒரு நிதிக் கட்டுப்பாட்டைப் பேணும் நிமித்தம் உயர் முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டன.

# விசாரணைப் பிரிவு

**2012 .12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்**

| மாகாணம் | மாவட்டம் | ஆரம்பிக்கப் பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை | விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| மேல் மாகானம் | கொழும்பு<br>கம்பஹா<br>களுத்துறை | 19<br>4<br>10 | 8<br>3<br>8 | 42%<br>75%<br>80% |
| மத்திய மாகாணம் | கண்டி<br>நுவரெலியா<br>மாத்தளை | 7<br>1<br>1 | 5<br>1<br>1 | 71%<br>100%<br>100% |
| தென் மாகாணம் | காலி<br>மாத்தறை<br>அம்பாந்தோட்டை | 2<br>6<br>11 | 2<br>3<br>5 | 100%<br>50%<br>45% |
| கிழக்கு மாகாணம் | திருகோணமலை<br>அம்பாறை<br>மட்டக்களப்பு | 3<br>4<br>3 | 0<br>1<br>0 | 0%<br>25%<br>0% |
| வடமேல் மாகாணம் | குருனாகல்<br>புத்தளம் | 6<br>2 | 6<br>0 | 100%<br>0% |
| வட மத்திய மாகாணம் | அனுராதபுரம்<br>பொலன்னறுவை | 9<br>5 | 1<br>3 | 11%<br>60% |
| ஊவா மாகாணம் | பதுளை<br>மொனராகலை | 4<br>5 | 3<br>2 | 75%<br>40% |
| சபரகமுவா மாகாணம் | இரத்தினபுரி<br>கேகாலை | 3<br>4 | 0<br>4 | 0%<br>100% |
| **மொத்தம்** | | **109** | **56** | **51%** |

**நிறுவன ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் பற்றிய விபரங்கள்**

| நிறுவனம் | ஆரம்பிக்கப் பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை | விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை | முன்னேற் றம் |
|---|---|---|---|
| கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 84 | 38 | 45% |
| வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 22 | 17 | 77% |
| வ/ப இலங்கை உரக் கூட்டுத்தாபனம் | 01 | 0 | 0% |
| வ/ப கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனம் | 02 | 01 | 50% |
| **மொத்தம்** | **109** | **56** | **51%** |

நிறைவு செய்யப்பட்டுள்ள 56 ஆரம்ப விசாரணைகள் தொடர்பில் மேல் நடவடிக்கையை எடுக்கும் நிமித்தம் உரிய சிபாரிசுகள் அந்தந்தத் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# சட்டப் பிரிவு

## பொறுப்புப் பணி

கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் பற்றிய அமைச்சினதும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களான கமநல அபிவிருத்தித் திணைக்களம், வன சீவராசிகள் பாதுகாப்புத் ததிணைக்களம், வ/ப இலங்கை உரக் கூட்டுத்தாபனம், வ/ப கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனம் மற்றும் உரச் செயலகம் ஆகியன தொடர்பில் அமைச்சினால் நிறைவேற்ற வேண்டிய சட்ட விடயங்களைக் கண்காணிக்கும் பணி இந்தச் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பணிகள்

- 1937 இன் 07 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- 2000 இன் 46 ஆம் இலக்கக் கமநல அபிவிருத்திச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- 1988 இன் 68 ஆம் இலக்க பசளை ஒழுங்குறுத்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல், அந்தச் சட்டங்களுக்குத் தேவையான ஒழுங்கு விதிகள், கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் என்பன தொடர்பான ஆலோசனைப் பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் திருத்தப்படும் அந்தச் சட்டமூலங்களை சட்ட வரையுநருக்குச் சமர்ப்பித்தல் ஆகிய விடயங்கள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

குத்தகை விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட ஏனைய விடயங்கள் தொடர்பான 2000 இன் 46 ஆம் இலக்கக் கமநல அபிவிருத்திச் சட்டம் திருத்தப்பட்டது. அந்தப் புதிய கமநல அபிவிருத்தி வரைவுச் சட்டமூலம் 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அந்த 2011 இன் 46 ஆம் இலக்கக் கமநல அபிவிருத்திச் சட்டம், (திருத்தல்) சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கு அமைய தற்பொழுது இருக்கின்ற குத்தகை விவசாயிகளின் வாரிசுகளுக்கு குத்தகை விவசாயிகள் பிரதியீட்டை உரிமையாக்கிக் கொடுப்பது தொடர்பான ஏற்பாட்டுத் தனி நபர் நடுத்தீர்ப்புச் சபை ஒன்றை நியமிக்கும் சட்ட ஏற்பாடுகளும் மற்றும் மீளாய்வு சபையும் தாபிக்கப்பட்டுள்ளன.

இன்று நடைமுறையிலிருக்கின்ற தேசிய வன சீவராசிகள் பற்றிய கொள்கைகளையும் சட்டங்களையும் பயனுள்ள விதத்தில் செயற்படுத்துவது விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பொறுப்புப் பணியாகும் என்பதுடன் அதற்காக குறித்த சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் தேவையான கட்டளைகளை விடுக்கும் விடயங்கள் திணைக்களத்தின் உதவியுடன் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அதே போன்று வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் சட்ட விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முறையாக நிகழாத சந்தர்ப்பங்கள் பற்றி அமைச்சுக்குக் கிடைக்கின்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகள் என்பன தொடர்பில் தேவையான அறிவுரைகள் இந்தப் பிரிவினால் வழங்கப்படுகின்றன.

2012.10.30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வ/ப மக்கள் உரத் தொழில்முயற்சிகளை தன்னார்வ அடிப்படையில் ஒழித்துக்கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால், அந்தத் தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான பணித் திட்டமிடல் விடயங்கள் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைச்சும் மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களும் நிறுவனங்களும் மற்றும் நியதிச்சட்ட சபைகளும் தொடர்பில் சட்டமா அதிபரின் திணைக்களத்துடன் இடம்பெறுகின்ற ஆலோசனை சார்ந்த கலந்துரையாடல் கூட்டங்களில் கலந்துகொண்டு தேவையான அவதானிப்பு விடயங்கள் தயாரிக்கப்பட்டு இந்தப் பிரிவினால் முன்வைக்கப்படுகின்றன.

அதே போன்று அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுக்கு எதிராகவும் சார்பாகவும் காணப்படுகின்ற நீதிமன்ற வழக்குகள், ஒப்பந்தங்கள், சட்ட ஆலோசனைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஏனைய வழக்கு விடயங்கள் என்பவற்றின் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் இந்தச் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

# கமநல அபிவிருத்தித் திணைக்களம்

# கமநல அபிவிருத்தித் திணைக்களம்

## தூரநோக்கு

" இலங்கையின் விவசாய சமூகத்தினதும் அனைத்து விவசாயக் காணிகளினதும் நிலையான அபிவிருத்தி"

## செயற்பணி

"இலங்கையின் விவசாய சமூகத்தின் நிலையான அபிவிருத்தியை அடையக்கூடியதும் மற்றும் அனைத்து விவசாயக் காணிகளிலிருந்தும் சிறந்த விளைதிறனைப் பெற்றுக்கொள்ளக்கூடியதுமான வகையில் தாபன, உதவி, சட்ட மற்றும் முகாமைத்துவம் ஆகியன சார்ந்த சேவைகளைத் திட்டமிட்டு வழங்குதலும் காலத்திற்கேற்ப அவற்றைப் பேணிச் செல்லலும்"

# அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் - 2012

## 1. தரிசு வயல்காணிகள் விளைபயனாக்கல் திட்டத்தின் கீழ் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைத்தல்

| | |
|---|---|
| **2012 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி** | **ரூ.மில்.**196.5 |
| **நிதி முன்னேற்றம்** | 67% |
| **நன்மை பெறும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை** | 8428 |
| **புதிதாகப் பயிரிடப்படவுள்ள வயல்காணிகளின் ஏக்கர் அளவு** | 4271 |
| **இலக்குக்கொள்ளப்பட்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை** | 218 |
| **பௌதீக முன்னேற்றம்** | |
| 75% அதிக நீர்ப்பாசனக் கைத்தொழில் | 99 |
| 74% - 50% இடைப்பட்ட நீர்ப்பாசனக் கைத்தொழில் | 92 |
| 49% - 25% இடைப்பட்ட நீர்ப்பாசனக் கைத்தொழில் | 13 |
| 25% குறைந்த நீர்ப்பாசனக் கைத்தொழில் | 14 |

## 2. கமநல சேவை நிலையப் பழுதுபார்ப்புகள்



கமநல சேவை நிலையங்களைப் புனரமைக்கும் பணிகளுக்கு 2012 ஆம் ஆண்டு 100 மில்லியன் ரூபா தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. தேசத்திற்கு மகுடம் என்ற கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக அனுராதபுர மாவட்டத்தின் கமநல சேவை நிலையங்களின் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக அதில் 50 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. எஞ்சிய 50 மில்லியன் ரூபா தொகை ஏனைய மாவட்டங்களின் கமநல சேவை நிலையங்களின் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

| விபரம் | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மில்.) | இலக்கு (க.சே.நி) | முன்னேற்றம் (2012.12.31) | |
|---|---|---|---|---|
| | | | நிதி (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
| ஸ்தம்பிதம் அடைந்திருந்த கைத்தொழில்கள் | 3.8 | 7 | 3.05 | 2011 ஆம் ஆண்டில் ஸ்தம்பிதம் அடைந்திருந்த 9 கைத்தொழில்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| புதிய கைத்தொழில்கள் | 46.2 | 59 | 32.7 | 100% - 55<br>25% - 50% - 03<br>25% குறைந்த - 01 |

### 3. மாவட்ட அலுவலகங்களின் பழுதுபார்ப்புப் பணிகள்

| விபரம் | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மில்.) | இலக்கு (க.சே.நி) | முன்னேற்றம் (2012.12.31) | |
|---|---|---|---|---|
| | | | நிதி (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
| ஸ்தம்பிதம் அடைந்திருந்த கைத்தொழில்கள் | 5.03 | 9 | 4.9 | 9 கமநல சேவை மாவட்ட அலுவலகங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| புதிய கைத்தொழில்கள் | 15.0 | 39 (தலைமை அலுவலகங்கள், 5 மாவட்ட அலுவலகங்கள் ) | 14.17 | 100% - 37<br>95% - 01<br>50% - 01 |

குறித்த செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி 22.0 மில்லியன் ரூபா ஆகும். அதில் 1.915 மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு மதிப்பீடு பதிவழிக்கப்பட்டுள்ளது. 20.085 மில்லியன் ரூபா மேற்குறிப்பிடப் பட்டவாறு பகிர்ந்தளித்து ஒதுக்கப்பட்டுள்ளது.

### புதிய கமநல சேவை நிலைய நிர்மாணம்

வட கிழக்கு மாகாணங்கள் உட்பட ஏனைய பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் விவசாயிகளுக்கு வினைத் திறன் வாய்ந்த ஒரு சேவையை வழங்குவதற்கு கமநல சேவை நிலையங்களை நிர்மாணிப்பது ஒரு அத்தியாவசிய தேவையாகும்.

| விபரம் | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மில்.) | இலக்கு (க.சே.நி) | முன்னேற்றம் (2012.12.31) | |
|---|---|---|---|---|
| | | | நிதி (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
| ஸ்தம்பிதம் அடைந்திருந்த கைத்தொழில்கள் | 40.0 | 5 | 21.06 | 100% - 03<br>50% - 75% - 02 |
| புதிய கைத்தொழில்கள் | | 3 | - | 100% - 02 |
| தேசத்திற்கு மகுடம் | | 11 | - | |

**4. பசளைக் களஞ்சியசாலைகள் நிர்மாணம்**



| ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மில்.) | இலக்கு | முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
| 2.6 | 3 | 2.4 | 100% |

**தேசத்திற்கு மகுடம் என்ற தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் கண்காட்சியும்**

2012 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் என்ற தேசிய அபிவிருத்திக் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக பல அபிவிருத்திச் செயற்பாடுகள் எமது திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டன. இதில் கமநல சேவை நிலையப் பழுதுபார்ப்புப் பணிகள் பிரதானமாக எமது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

| கருத்திட்டம் | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மில்.) | இலக்கு | செலவு (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| கமநல சேவை நிலையப் பழுதுபார்ப்புப் பணிகள் | 50.0 | 35 | 36.9 | 96% புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |

**5. 2KR கருத்திட்டம்**

இலங்கையில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அமைந்த ஜப்பான் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தற்பொழுது ஏறக்குறைய 20 வருடங்களாக கமத்தொழில் அமைச்சினூடாக இந்தத் திணைக்களத்திற்கு 04 சில்லு உழவியந்திரங்கள், 02 சில்லு உழவியந்திரங்கள், நீரிறைக்கும் பாம்பிகள் முதலிய விவாசய உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. அந்த உபகரணங்கள் இயங்கும் கமக்காரர் அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

**2012.12.31 ஆம் திகதிற்கான முன்னேற்றம்**

| மாவட்டம் | 2 சில்லு உழவியந்திரம் | 4 சில்லு உழவியந்திரம் |
|---|---|---|
| கொழும்பு | - | - |
| கம்பஹா | - | - |
| களுத்துறை | - | - |
| கண்டி | 5 | - |
| மாத்தளை | 6 | - |
| நுவரெலியா | 6 | - |
| காலி | 5 | - |
| மாத்தறை | 18 | 1 |
| அம்பாந்தோட்டை | 40 | 2 |
| யாழ்ப்பாணம் | 80 | - |
| வவுனியா | 75 | - |
| முல்லைத்தீவு | 75 | 2 |
| மன்னார் | 55 | 2 |
| கிளிநொச்சி | 65 | - |
| மட்டக்களப்பு | 55 | 2 |
| அம்பாறை | 50 | 3 |
| திருகோணமலை | 50 | 3 |
| குருனாகல் | 30 | 3 |
| புத்தளம் | 25 | 2 |
| அனுராதபுரம் | 56 | 4 |
| பொலன்னறுவை | 24 | 2 |
| பதுளை | 40 | 2 |
| மொனராகலை | 40 | 2 |
| இரத்தினபுரி | 10 | 1 |
| கேகாலை | 10 | 1 |
| **மொத்தம்** | **820** | **32** |

## 6. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைப்பு





இந்தத் திணைக்களம் அதன் ஆரம்பம் முதல் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பு விடயத்தை ஒரு முக்கிய பணியாக செயற்படுத்தி வந்துள்ளது. 2000 கிராமிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் கணக்கெடுப்பு ஆய்வுக்கு இணங்க, இலங்கை முழுதிலும் 11,257 குளங்களும் 12,942 அணைக்கட்டுகளும் காணப்படுகின்றன எனப் பதிவாகியுள்ளது. இதனுடன் சம்பந்தப்பட்ட நீர்ப்பாசன முறைமைகளின் அளவு அதிகமானது. நெல் பயிரிடலில் ஈடுபடுகின்ற விவசாயிகள் சார்பில் இவற்றின் பராமரிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் கடந்த 50 வருட காலங்களினுள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

**2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்**

| மாவட்டம் | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மில்.) | உத்தேசிக்கப் பட்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை | 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
| அனுராதபுரம் | 200.00 | 119 | 131.36 | சிறிய நீர்ப்பாசனங்கள்<br>99 - 100%<br>11 - 75% -100%<br>9 - 50% - 75% |
| குருனாகல் | 21.6 | 38 | 17.09 | சிறிய நீர்ப்பாசனங்கள்<br>35 - 100%<br>1 - 80%<br>2 - 25% - 50% |

**7. விவசாய வங்கி**

விவசாயத்தை தமது பிரதான வாழ்வாதாரமாகக் கொண்ட இந்நாட்டுக் கிராமிய வறிய விவசாயிகளின் கடன் தேவைகளை நிறைவேற்றுவது மற்றும் அவர்களின் சேமிப்புகளை அதிகரிப்பதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதார மட்டத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதை அடிப்படையாகக் கொண்டு கமத்தொழில் அமைச்சின் அனுசரணையின் கீழ் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் 1998 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தி வங்கிகள் கமநல சேவை ஆலோசனைக் குழுவின் ஒரு அலகாக ஆரம்பிக்கப்பட்டன.

2010 ஆம் ஆண்டளவில் நாட்டில் தாபிப்புப் பெற்ற 472 விவசாய வங்கிகள் வடக்குக்கும் கிழக்குக்கும் 43 விவசாய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டு இது வரை நாட்டின் சகல மாவட்டங்களிலும் இயங்குகின்ற விவசாய வங்கிகளின் எண்ணிக்கை 529 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

விவசாய வங்கி (முன்னோடிக்) கருத்திட்டத்தின் கீழ் 25,000.00 ரூபா உச்சளவாக இருந்த கருத்திட்டக் கடன் வரையறையை 100,000.00 ரூபா வரை அதிகரித்து 2012 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 571 விவசாயிகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்**

| | | |
|---|---|---|
| உறுப்புரிமையைப் பெற்ற புதிய பங்காளர்கள் | - | 49051 |
| சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்த புதிய சேமிப்பாளர்கள் | - | 45286 |
| புதிய சேமிப்புக் கணக்குகள் | - | 7386 |

150 விவசாய வங்கிகளுக்கு பாதுகாப்புப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

100 விவசாய வங்கிகளுக்கு மூன்றுமொழியிலும் பெயர்ப்பலகைகள் வழங்கப்பட்டுள்ளன.

கடன் விநியோகம் (2012.12.31 ஆம் திகதிக்கு)

| | |
|---|---|
| விவசாயக் கடன் | - ரூ.மில். 479 |
| கருத்திட்டக் கடன் | - ரூ.மில். 255 |
| 100, 000 கடன்கள் | - ரூ.மில். 32.5 |

## 8. கமநல அபிவிருத்தி நிதியம்

2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின் கீழ் கமநல அபிவிருத்தி நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியத்தின் கீழுள்ள வருமானங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- இந்தச் சட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பில் விதிக்கப்படுகின்ற சகல தண்டப் பணங்களும்
- இந்தச் சட்டத்தின் அல்லது வேறொரு எழுத்திலான ஒரு சட்டத்தின் கீழ் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய சகல நிதிகளும் மற்றும் நன்கொடையாகக் கிடைக்கின்ற சகல நிதிகளும்
- பாராளுமன்றத்தினால் அவ்வப்பொழு இந்த நிதியம் தொடர்பில் ஒதுக்கப்படுகின்ற சகல நிதிகளும்
- இந்த நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என ஆணையாளர் நாயகத்தினால் அவ்வப்பொழுது நிர்ணயிக்கப்படுகின்ற சகல நிதிகளும்
- இந்தச் சட்டத்தின் கீழ் ஏக்கர் வரியாகச் சேகரிக்கப்படுகின்ற சகல நிதிகளிலிருந்தும் வரும் உரிய விகிதாசாரத் தொகை

அதற்கு இணங்க, 2012 ஆம் ஆண்டில் கீழ்காணும் விடயங்கள் தொடர்பில் கமநல அபிவிருத்தி நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

**2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்**

| தொ. இல. | விபரம் | நிதி (ரூ.மில்.) | 2012.12.31 ஆம் திகதிக்கான செலவு | வீதம் (%) | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | புதிய விவசாயக் கொள்கைகள் செயற்படுத்துகை | 1,600,000.00 | 45,900.00 | 2.87 | |
| 2 | விநியோகங்கள் மேம்பாடும் அபிவிருத்தியும் | 9,200,000.00 | 5,163,785.33 | 56.13 | |
| 3 | கமநலக் கேந்திர நிலையங்களின் நிருவாகமும் அபிவிருத்தியும் | 100,000.00 | 394,635.63 | 100 | செலவுக்கான நிதி போதாமை காரணமாக நிதி மாற்றல் செய்யப் பட்டுள்ளது. |
| 4 | கமநல சேவை நிலையங்களின் கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பராமரிப்பும் பழுதுபார்ப்புகளும் | 3,000,000.00 | 101,345.16 | 3.38 | |
| 5 | கமநல சேவை நிலையங்களின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி | 2,000,000.00 | 1,018,497.60 | 50.92 | |
| 6 | அலுவலர்கள் பயிற்சி | 300,000.00 | - | | |
| 7 | விசாரணை விடயங்கள் | 1,000,000.00 | 76,673.00 | 7.67 | |
| 8 | போக்குவரத்து வசதிகள் | 50,000.00 | - | | |
| 9 | நிதி உதவி வழங்கல் | 1,200,000.00 | 543,000.00 | 45.25 | |
| 10 | ஏனைய மீண்டெழும் செலவுகள் | 1,000,000.00 | 16,395.00 | 1.64 | |
| 11 | 2 மற்றும் 4 சில்லு உழவியந்திரங்கள் தவணைக் கட்டணங்களை மீண்டும் அனுப்பி வைத்தல் | 41,000,000.00 | - | | |
| 12 | முற்பணங்கள் | | 767,331.16 | | |
| **மொத்தம்** | | **60,450,000.00** | **8,127,562.88** | **13.45** | |

**கலந்துரையாடல்களும் கூட்டங்களும்**

| ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மில்.) | கலந்துரையாடல் எண்ணிக்கை | 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் (ரூ.மில்.) |
|---|---|---|
| 1.2 | 26 | 1.13 |

**பயிற்சித் திறன் அபிவிருத்தி**

| ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மில்.) | கலந்துரையாடல் எண்ணிக்கை | 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் (ரூ.மில்.) |
|---|---|---|
| 2.25 | 35 | 2.36 |

**முழுமொத்த நிதி முன்னேற்றம் (2012.12.31 ஆம் திகதிக்கு)**

| விடயம் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | விகிதம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 3260.08 | 3,259.93 | 100% |
| மூலதனச் செலவினம் | 776.99 | 562.06 | 72.34% |
| **மொத்தம்** | **4,037.07** | **3,821.99** | **94.67%** |

# வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்



.

## தூரநோக்கு

''இன்றைய மற்றும் நாளைய சந்ததியினருக்காக வன வளங்களை நீண்ட காலத்திற்குப் பாதுகாப்பது வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தூரநோக்காகும்''

## செயற்பணி

''அனைவரும் ஒன்றிணைந்து தொழில் சார்ந்த ஒரு முகாமைத்துவத்தினூடாக வன சீவராசி வளங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயற்பணியாகும்''

# அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - 2012

## 1. கஜமித்துரோ நிகழ்ச்சித்திட்டம்

யானை-மனிதன் என்ற பிரச்சினையின்றிய ஓர் இலங்கை என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்த கஜமித்துரோ என்ற நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டத்தை 1250 மில்லியன் ரூபா செலவில் 4 வருட காலத்திற்குள் நிறைவு செய்ய உத்தேசமாக இருக்கின்றது.

### நோக்கங்கள்

- யானை-மனிதன் என்ற பிரச்சினையைக் குறைப்பதற்கான மின்சார வேலி நிர்மாணமும் புனரமைப்பும்
- காட்டு யானைகளினால் வனங்கள் தாவரங்கள் அழிவுக்கான நஷ்டஈட்டைச் செலுத்துதல்
- யானை-மனிதன் என்ற பிரச்சினையைக் குறைப்பதற்கான உபாயங்கள் அபிவிருத்தியும் திறன் விருத்தியும்





**2012 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 200.0**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 177.6**

### பௌதீக முன்னேற்றம்

- 2012 ஆம் ஆண்டு 192 கி.மீ நீளமான மின்சார வேலிகளின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன
- 412 கி.மீ நீளமான மின்சார வேலி நிர்மாணத்திற்கான பொருட்கள் கொள்வனவு விடயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- பதுளுவெல யானைக் கட்டுப்பாட்டு அலகும் லுணுகம்வெஹர நடை பாலமும் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளன.
- தற்பொழுதிருக்கின்ற மின்சார வேலிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 2. ஹொரவ்பொத்தானை யானை பாதுகாப்பு வனப்பூங்கா நிர்மாணம்

3 வருட காலத்தினுள் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு 504 மில்லியன் ரூபா ஆகும்.

### நோக்கங்கள்

- யானை-மனிதன் என்ற பிரச்சினை காணப்படுகின்ற பகுதிகளின் சமூகப் பொருளாதார அழிவுகளைக் குறைத்தல்
- காட்டு யானை வனப்பூங்காவை அண்மித்த சுற்றுப்புற சுற்றுலா விடயங்களை ஊக்குவித்தல்
- காட்டு யானைகள் பாதுகாப்பு வனப்பூங்காவுக்கு அண்மித்த பகுதி மக்களுக்கு வருமானம் ஈட்டும் வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

**2012 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 200.0**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 80.4**

**பௌதீக முன்னேற்றம்**

- 16 கி.மீ நீளமான மின்சார வேலி வீதிகள் சுத்தமாக்கப்பட்டுள்ளன என்பதுடன் 02 கி.மீ நீளமான வீதிகளும் அமைத்து நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- விஷேடமாகத் திட்டமிடப்பட்ட ஏறக்குறைய 1,800 மின்சார வேலி காங்க்றீட்டுக் கம்பங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கம்பங்களை நடும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இறுதியாகும் நேரம் 225 கம்பங்கள் நடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- 04 குளங்களை நிர்மாணிக்கும் நிமித்தம் கேள்வி ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- அலுவலகக் கட்டிடங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 3. தேசத்திற்கு மகுடம் என்ற தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வில்பத்து தேசிய சரணாலயத்தை அபிவிருத்தி செய்தல்

2012 தேசத்திற்கு மகுடம் என்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக வில்பத்து தேசிய சரணாலயத்தின் பின்வரும் அபிவிருத்திப் பணிகள் செயற்படுத்தப்பட்டன.

- தேசிய சரணாலய வளாகத்தினுள் சுற்றாடல் சுற்றுலா விடயங்களை மேம்படுத்துதல்
- வன சீவராசிகள் பாதுகாப்பு வலையமைப்பினுள் நிருவாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- வன சீவராசிகள் பாதுகாப்பு வலயத்தை விசாலப்படுத்துதல்
- தகவல் தொடர்பாடல் வலையமைப்பை மேம்படுத்துதல்

**2012 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 126.0**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 67.1**

**பௌதீக முன்னேற்றம்**



- 2012 தேசத்திற்கு மகுடம் என்ற அபிவிருத்திக் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டது.



- 2012 தேசத்திற்கு மகுடம் என்ற தேசிய கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக வில்பத்து சரணாலயத்தின் தந்திரிமலை மற்றும் மஹாவிலச்சி ஆகிய பூங்கா வழிகள் திறக்கப்பட்டன.

- தேசத்திற்கு மகுடம் என்ற கண்காட்சி வளாகத்தைச் சுற்றி 7 கி.மீ நீளமான ஒரு மின்சார வேலி அமைக்கப்பட்டுள்ளது. 95 கி.மீ நீளமான லுணுவில–பொகொட–மல்வத்து ஓயா வரை மின்சார வேலியை அமைப்பதற்குத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 60 கி.மீ நீளமான அந்த மின்சார வேலி வீதி சுத்தம் செய்யப்பட்டு அதில் 39.5 கி.மீ மின்சார வேலி அமைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- வில்பத்து தேசிய சரணாலயத்தின் 100 கி.மீ நீளமான வீதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. தந்திரிமலை, எலுவன்குளம், கலாஓயா மற்றும் மஹவிலச்சி ஆகிய பிராந்திய அலுவலகங்களும் மொல்லிக் குளம் கட்டிடங்களும் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளன.
- வில்பத்து தேசிய சரணாலயத்தில் 05 குளங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

## 4. மொரகஹகந்தைக் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற வன சீவராசிகள் பாதுகாப்பு விடயங்கள்

தற்பொழுது நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்ற மொரகஹகந்தை–களுகங்கைக் கருத்திட்டத்தின் நிதியேற்பாட்டின் கீழ் 2008 ஆம் ஆண்டு முதல் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் களுங்கை ஆற்றுப் பகுதியில் பின்வரும் நோக்கங்களுக்காக வன சீவராசிகள் பாதுகாப்பு விடயங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**2012 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 50.0**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 43.42**

**பௌதீக முன்னேற்றம்**

- கவுதுல்ல தேசியப் பூங்காவில் 02 பாதுகாப்பு அலுவலகங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப் பட்டுள்ளன.
- 204 கி.மீ நீளமான மின்சார வேலிகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப் பட்டுள்ளன. அந்த மின்சார வேலிகளுக்கான 04 மின்சக்தி அறைகளும் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளன.
- வஸ்கமுவ மற்றும் கவுதுல்ல ஆகிய தேசியப் பூங்காக்களில் 54 அறிவித்தல் பலகைகள் நடப்பட்டுள்ளன.
- 15 மோட்டார்ரோல் மின்சார உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- வஸ்கமுவ தேசியப் பூங்காவில் 03 நடைபாலங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- பங்களாப் பொறுப்பாளர்களுக்கும் ஏனைய வன சீவராசி சம்பந்தமான அலுவலர்களுக்குமான பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்பட்டன.
- அங்கம்மெடில்ல மற்றும் மின்னேரிய ஆகிய தேசிய பூங்காக்களில் 01 முகாம் காணி அபிவிருத்தி செய்யப் பட்டுள்ளது.
- 150 ஏக்கர் புல் நிலங்களின் பராமரிப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.
- 02 தனிக் கெப் வாகனங்கள் வன சீவராசிகள் பாதுகாப்புப் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டன.

**வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்கள் (2012 .12.31 ஆம் திகதிக்கு)**

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1. | **வனப் பாதுகாப்புப் பிரதேச வலையமைப்பைத் தாபித்தல்**<br><br>ஹொரவ்பொத்தான தேசியப் பூங்கா அறிவித்தல் பலகை<br><br>முத்துராஜவெல புன்னிய பூமி அறிவித்தல் பலகை | 7.5 | 7.44 | • பாணம–குடிம்பிகல, கல்ஓயா, வில்பத்து, சோமாவத்தி, மாதுருஓயா ஆகிய தேசிய பூங்காக்கள் மற்றும் மதுனாகல, விக்டோரியா, ரன்தெனிகல, இரன்டம்பே ஆகிய புன்னிய பூமிகள் மற்றும் ஹக்கல கடும் வனப் பாதுகாப்பு ஒதுக்கம் என்பவற்றுக்கு 1,222 எல்லைக் கம்பங்கள் நடப்பட்டுள்ளன.<br>• வனப் பாதுகாப்புப் பிரதேசங்களில் 77 அறிவித்தல் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதுடன் 12 பெயர்ப் பலகைகள் புனரமைக்கவும் பட்டுள்ளன. |
| 2. | **சுற்றாடல் சுற்றுலா விடய அபிவிருத்தி**<br><br>ரிட்டிகல அத் அத்துரு செவன<br><br>எக்கல்ஓயா வன சீவராசிகள் சுற்றுலா விடுதி | 11.0 | 6.25 | • ரிட்டிகல அத் அத்துரு செவன 2012.03.24 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.<br>• தொண்டர் வழிகாட்டிகளின் ஆற்றல் விருத்திற்காக 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.<br>• யால தேசிய பூங்காவின் ரவி சமரசிங்க ஞாபகார்த்த சுற்றுலாத் தகவல் நிலையம் 2012.01.08 ஆம் திகதியும் மாதுருஓயா தேசிய பூங்காவின் எடரஅட்டமுல்ல வன சீவராசிகள் சுற்றுலா விடுதி 2012.06.01 ஆம் திகதியும் சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து வைக்கப்பட்டன.<br>• 05 வன சீவராசிகள் சுற்றுலா விடுதிகளின் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. |

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 3. | **மக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**<br><br>உயிரியல் வேலி<br><br>பெண்கள் சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கைப்பணிப் பொருட்கள் ஊக்குவிப்பு | 1.6 | 1.65 | • சமனல வனாந்திரத்தினுள் 06 சிரமதான நிகழ்ச்சித்திட்டங்களும் வன சீவராசிகள் பாதுகாப்பு பற்றி மக்களை விழிப்பூட்டும் 06 நிகழ்ச்சித்திட்டங்களும் மற்றும் பெண்கள் சக்தி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தி முடிக்கப்பட்டன.<br>• வனப் பாதுகாப்புப் பிரதேசங்களைச் சுற்றியிருக்கின்ற 10 கி.மீ நீளமான உயிரியல் வேலிகள் பராமரிக்கப்பட்டுள்ளன.<br>• வனப் பாதுகாப்புப் பிரதேசங்களைச் சுற்றி பழப் பயிர்களைப் பயிரிடும் 02 கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br>• குமண தேசிய பூங்காவின் கடொலான 02 பயிர்ச் செய்கைக் கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| 4. | **அச்சுருத்தல்களுக்கு உள்ளான வன சீவராசிகள் பாதுகாப்பு**<br><br> | 3.5 | 2.82 | • குமண, ஹிக்கடுவ, களமெட்டிய மற்றும் புந்தள ஆகிய தேசிய பூங்காக்களினுள் ஆமைகளின் பாதுகாப்புக் கருதி அதன் இனப்பெருக்கத்திற்கான நிலைய அபிவிருத்தி மற்றும் கட்டிட நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.<br>• உடவளவை அத் அத்துரு செவனவிலிருந்து 09 யானைக் குட்டிகள் விடுவிக்கப்பட்டன.<br>• அத்துருகிரியப் பிரதேசத்தில் 27 மான்கள் பிடிக்கப்பட்டு உடவளவை தேசிய பூங்காவில் விடப்பட்டுள்ளன. |
| 5. | **தகவல் தொடர்பாடடல் முறைமை மேம்பாடு**<br><br><br>வானொலித் தொடர்பாடல் வலையமைப்புப் பராமரிப்பு | 2.0 | 1.43 | • தலைமை அலுவலகம் மற்றும் கள அலுவலகங்கள் என்பவற்றுக்கு 25 தொலைபேசிகள் கொள்வனவு செய்யப்பட்டன.<br>• தேசிய பூங்காக்களில் அனுமதிச் சீட்டுக்கள் விநியோகத்தைக் கணனிமயப்படுத்தும் பணிகளும், திணைக்களத்தின் கணனி வலையமைப்பு மற்றும் வானொலித் தொடர்பாடல் வலையமைப்பு ஆகியவற்றின் பராமரிப்புப் பணிகளும் மற்றும் மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 6. | வீதி முறைமை புனரமைப்பு<br><br> | 14.5 | 11.35 | • குமண, வஸ்கமுவ, யால மற்றும் உடவளவை ஆகிய தேசிய பூங்காக்களின் 47 கி.மீ நீளமான வீதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.<br>• 02 நடை பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.<br>• வஸ்கமுவ மற்றும் வில்பத்து ஆகிய தேசிய பூங்காக்களில் 5 கி.மீ நீளமான வீதிகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. |
| 7. | நீர்த்தேக்கள் அருவிகள் புனரமைப்பு<br> | 11.0 | 4.6 | • வில்பத்து தேசிய சரணாலயத்தின் 03 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. 04 குளங்களின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 8. | கட்டிடங்கள் பழுதுபார்ப்பு<br><br>வவுனியா வன சீவராசிகள் நிருவாகக் கட்டிட நிர்மாணம் | 29.45 | 24.37 | • வனப் பாதுகாப்புப் பிரதேசங்களின் நிருவாகக் கட்டிடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்கள் அடங்கலாக 28 கட்டிடங்கள், 06 நீர் விநியோகத் திட்டங்கள் மற்றும் 03 மின்சார விநியோக முறைமைகள் என்பவற்றின் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br>• யால தேசிய பூங்காவில் நீர் டாங்கிகள் நிர்மாணப் பணிகளும் வன சீவராசிகள் தலைமை அலுவலகத்தின் எஞ்சிய பணிகளும் நிறைவு செய்யப்பட்டன. |
| 9. | வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு<br> | 4.0 | 3.97 | • 05 புகைப்படப் பிரதியெடுக்கும் இயந்திரங்கள் மற்றும் 14 கணனிகள் அவற்றின் உதிரிப் பாகங்கள், 07 அச்சீட்டு இயந்திரங்கள், பல வகையான 80 கதிரைகள், 01 லெப்டொப் கணனி, 01 பெக்ஸ் இயந்திரம், 01 அலுமாரி, வரைபடங்களை நிறுத்திவைக்கும் 05 சாதனங்கள், 03 குளிரூட்டிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டன.<br>• மாதுருஓயா வன சீவராசிகள் சுற்றுலா விடுதிக்கு வீட்டுத் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 10. | இயந்திர உபகரணங்கள் கொள்வனவு | 3.35 | 1.23 | • கல்ஒயா தேசிய பூங்காவுக்கு ஒரு படகு கொள்வனவு செய்யப்பட்டது.<br>• வனப் பாதுகாப்புப் பிரதேசங்களின் அலுவலகக் கடமைகளுக்காக 04 மோட்டார் சைக்கில்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 11. | வதிவிடங்கள் மேம்பாடு<br><br> | 7.5 | 7.5 | • உடவளவை மற்றும் லுணுகம்வெஹர ஆகிய தேசிய பூங்காக்களில் வதிவிடங்கள் மேம்பாட்டுத் திட்டத்திட்டத்தின் கீழ் 118 ஹெக்டேயர் காணிகளில் ஆக்கிரமித்து வளரும் தாவரங்கள் அகற்றப்பட்டன.<br>• குமண தேசிய பூங்காவின் 10 கி.மீ நீளமான வீதியின் அடிப்பாகங்கள் அகற்றும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br>• உடவளவை தேசிய பூங்கா மற்றும் விக்டோரியா, ரன்தெனிகல, இரன்டம்பே ஆகியவற்றின் 37 கி.மீ நீளமான தீ வார்கள் பராமரிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| 12. | பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிகள்<br> | 2.0 | 1.9 | • திணைக்களத்தின் ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் 09 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>• பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டும் 60 நிகழ்ச்சிச்சித்திட்டங்கள், அரசாங்க ஊழியர்களை விழிப்பூட்டும் 14 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வன சீவராசிகள் வலயங்களில் 32 வன சீவராசி கண்காட்சிகள் என்பன நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன.<br>• 250 வன சீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான படகு ஓட்டல், GPS பாவனை, துப்பாக்கிப் பாவனை, சட்டங்களைச் செயற்படுத்துதல் ஆகியன பற்றிய பயிற்சிகளும் புதிதாக ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான ஆரம்பப் பயிற்சிப் பாடநெறிகளும் நடாத்தப்பட்டுள்ளன.<br>• இரண்டு அலுவலர்களுக்கு பட்டப்பின்படிப்பைத் தொடர்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.<br>• தலைமை அலுவலகத்தின் 25 அலுவலர்களுக்கு 1 தமிழ் மொழிப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிதி (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 13. | பாதுகாப்பு ஆய்வு பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்துகை<br><br>கொவிஜன உதான செய்திப் பத்திரிகை | 3.75 | 3.69 | • உலக சுற்றாடல் தினம், பல்லுயிரினங்களின் தினம், ஈர நிலங்கள் தினம் முதலிய கொண்டாட்டங்கள் தொடர்பான 14 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் வன சீரவராசிகள் வலயங்களில் நடாத்தப்பட்டன.<br>• பாடசாலை மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் உள்ளிட்ட மக்கள் விழிப்புணர்வு தொடர்பான 100 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.<br>• மீன்கள் தொடர்பான கல்வி சார்ந்த 5,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன.<br>• வனந்தரே கனந்தரே என்ற நிகழ்ச்சித்திட்டம் வானொலிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் ஒலிபரப்பபட்டது. கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் பற்றிய அமைச்சினால் வெளியிடப்படும் 'கமநல உதான' என்ற செய்திப் பத்திரிகையைப் பிரசுரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. |
| 14. | பாதுகாப்பையும் சட்டத்தையும் நிலைநாட்டுதல் | 6.1 | 6.08 | • தெற்காசிய வலயத்தில் வன சீவராசிகள் பற்றிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சர்வதேச மாநாடு 2012.06.03 ஆம் திகதி கொழும்பில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.<br>• GPS மற்றும் செய்மதிப் புகைப்படப் பாவனை ஆகியவற்றின் மூலம் சட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பில் திணைக்களத்தின் 50 அலுவலர்களுக்கு அறிவூட்டுவதற்கான 02 வேலையரங்குகள் நடாத்தப்பட்டன. |
| 15. | தேசிய வன சீவராசிகள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கேந்திர நிலையங்களைப் பராமரித்தல்<br><br>தேசிய வன சீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கேந்திர நிலையம்-கிரித்தலை | 8.00 | 7.98 | • வன சீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஆற்றல் விருத்திற்காக வன சீவராசிகள் முகாமைத்துவம் பற்றிய 02 சிரேஷ்ட மற்றும் கனிஷ்டச் சான்றிதழ் பத்திரப் பாடநெறிகள் கிரித்தலை தேசிய வன சீவராசிகள் தொடர்பான பயிற்சி ஆராய்ச்சிக் கேந்திர நிலையத்தில் நடாத்தப்பட்டன.<br>• அரசாங்க ஊழியர்கள் மற்றும் திணைக்கள அலுவலர்கள் ஆகியோரை விழிப்பூட்டும் 08 குறுங்கால நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. |
| 16. | வாகனங்கள் பழுதுபார்ப்பு | 7.0 | 6.75 | • திணைக்களத்தினதும் கள அலுவலகங்களினதும் வாகனங்களின் பழுதுபார்ப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. |

### வன சீவராசிகள் பாதுகாப்பு நிதியம்

வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்த வன சீவராசிகள் பாதுகாப்பு நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. வன சீவராசிகள் பாதுகாப்பு விடயங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தின் ஒரு பகுதியை வன சீவராசிகள் பாதுகாப்பு விடயங்களுக்குப் பயன்படுத்துவது இந்த நிதியத்தின் குறிக்கோளாகும். சுற்றுலா விடயங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தின் ஒரு பகுதி, வன சீவராசிகள் குற்றங்களுக்கு எதிராக அறவிடப்படும் தண்டப் பணங்கள், திணைக்களத்தினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளிலிருந்து கிடைக்கின்ற வருமானம் மற்றும் நன்கொடைகள் என்பன இந்த நிதியில் அடங்கும்.

### வன சீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் முன்னேற்றம் (2012 .12.31 ஆம் திகதிக்கு)

| நிதி மூலம் | மதிப்பீடு (ரூ.மில்.) | செலவு (ரூ.மில்.) | (%) |
|---|---|---|---|
| வன சீவராசிகள் பாதுகாப்பு நிதியம் | 510.0 | 406.0 | 79.6% |

**வன சீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் வருமானம் (2012.12.31 ஆம் திகதிக்கு)**

| மாதம் | வருமானம் (ரூ.மில்.) |
|---|---|
| சனவரி | 65.9 |
| பெப்ருவரி | 68.7 |
| மார்ச் | 62.9 |
| ஏப்ரல் | 51.8 |
| மே | 28.5 |
| யூன் | 30.3 |
| யூலை | 69.7 |
| ஆகஸ்ட் | 94.0 |
| செப்டம்பர் | 52.0 |
| ஒற்றோபர் | 52.1 |
| நவம்பர் | 56.9 |
| திசம்பர் | 69.6 |
| மொத்தம் | 702.4 |

**தேசிய பூங்காக்களுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை (2012.12.31 ஆம் திகதிக்கு)**

| தேசிய பூங்கா | உள்நாட்டு | வெளிநாட்டு |
|---|---|---|
| யால | 217,898 | 121,735 |
| ஹோட்டதென்ன | 184,744 | 39,123 |
| உடவளவை | 52,995 | 23,082 |
| வஸ்கமுவ | 22,891 | 812 |
| மின்னேரிய | 37,833 | 25,020 |
| புந்தள | 6,397 | 4,853 |
| ஹொரகொல்ல | 6,637 | 2 |
| கவுதுல்ல | 8,930 | 6,443 |
| லுணுகம்வெஹர | 3,115 | 48 |
| கல்ஒயா | 2,523 | 332 |
| குமண | 18,644 | 1,958 |
| அங்கம்மெடில்ல | 1,536 | - |
| கல்வேஸ்லேண்ட் | 1,521 | 82 |
| வில்பத்து | 29,689 | 5,417 |
| மாதுருஒயா | 716 | 21 |
| லாஹுகல | 314 | 110 |
| பறவைத் தீவு | 36,646 | 8,437 |
| ஹிக்கடுவை | 40,506 | 7,050 |
| உடவளவை அத் அத்துரு செவன | 106,176 | 9,527 |
| மொத்தம் | 779,711 | 254,052 |

**முழுமொத்த நிதி முன்னேற்றம் (2012.12.31 ஆம் திகதிக்கு)**

| செலவினத் தொகுதி | மதிப்பீடு (ரூ.மில்.) | செலவு (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 648.2 | 424.2 | 65% |
| மீண்டெழும் செலவு | 483.1 | 481.6 | 99% |
| மொத்தம் | 1131.3 | 905.8 | 80% |

# தேசிய உரச் செயலகம்

# தேசிய உரச் செயலகம்

## தூரநோக்கு

"இலங்கையில் பயிரிடப்படுகின்ற சகல பயிர்களினதும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு தேவையான சேதன மற்றும் அசேதனப் பசளைகளை உரிய தரத்தில் உரிய காலத்திற்கு விநியோகிப்பதை உறுதிசெய்தல்"

## செயற்பணி

"பசளை ஒழுங்குறுத்தல் சட்டத்தின் சட்டஏற்பாடுகளுக்கு அமைய உரிய சகல தரப்புகளையும் இணைத்துக்கொண்டு விஞ்ஞான ரீதியான சிபாரிசுகளின் பேரில் பசளைத் தேவைகளை மதிப்பிடுதல், பசளை இறக்குமதி மற்றும் களஞ்சியக் கட்டுப்பாடு, உரிய தரத்திலான பசளைகளை விநியோகித்தல் மற்றும் விற்பனை ஆகியவற்றை உறுதிசெய்தல், சேதன மற்றும் அசேதனப் பசளைகளின் பாவனையில் சுற்றாடல்நேயப் பசளைப் பாவனையை மேம்படுத்துதல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கச் செய்தல் ஆகிய நேக்கங்களைக் கொண்ட பசளை நிவாரணத் திட்டத்தைச் செயற்படுத்துதல் மற்றும் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்"

# அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - 2012

**2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்**

**1. கொள்கைகள், நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் அனுமதிப்பத்திரப் பிரிவு**

| நிறுவனம் | | | | தயாரித்தல் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| புதிய அனுமதிப்பத்திரம் | | புதுப்பித்தல் | | புதிய அனுமதிப்பத்திரம் | | புதுப்பித்தல் | |
| இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| - | 08 | 61 | 53 | - | 04 | 25 | 18 |

| உற்பத்தி | | | | பகிர்ந்தளிப்பும் விற்பனையும் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| புதிய அனுமதிப்பத்திரம் | | புதுப்பித்தல் | | புதிய அனுமதிப்பத்திரம் | | புதுப்பித்தல் | |
| இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| - | 02 | 02 | 01 | - | 135 | - | 19 |

- பின்வரும் பிரதான குழுக்களுக்கும் மற்றும் கூட்டங்களுக்கும் தேசிய உரச் செயலகத்தின் அலுவலர்களினது ஒத்துழைப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

| குழு / கூட்டங்கள் | தேசிய உரச் செயலகத்தின் அலுவலர்கள் பங்குபற்றிய சந்தர்ப்பங்கள் |
|---|---|
| மாவட்ட விவசாயக் குழு | 225 |
| மாவட்டப் பசளைக் குழு | 62 |
| பிரதேச விவசாயக் குழு | 345 |
| கமநல சேவைகள் குழு | 280 |
| பிராந்திய அலுவலர்கள் கூட்டம் | 256 |
| விவசாய ஆலோசகர் குழு | 128 |

## 2. தொழில்நுட்பப் பொருளாதாரப் பகுப்பாய்வுப் பிரிவு

- **உரத்தின் தரம் மற்றும் பகுப்பாய்வு சார்நத நிகழ்ச்சித்திட்டங்கள்**

**ஒவ்வொரு இரசாயன ஆய்வு கூடத்தினாலும் பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| மாதம் | ITI | SLSI | SGS | B&B | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 33 | - | 36 | 6 | 75 |
| பெப்ருவரி | 26 | - | 6 | 24 | 56 |
| மார்ச் | 27 | - | 26 | 6 | 59 |
| ஏப்ரல் | 20 | - | 12 | 3 | 35 |
| மே | 29 | - | 12 | 9 | 50 |
| யூன் | 17 | 13 | 9 | 3 | 42 |
| யூலை | 20 | 13 | 10 | 19 | 62 |
| ஆகஸ்ட் | 13 | 3 | 21 | 40 | 77 |
| செப்டம்பர் | 21 | 12 | 22 | 32 | 87 |
| ஒற்றோபர் | 48 | 7 | - | - | 55 |
| நவம்பர் | 4 | - | 20 | 8 | 32 |
| திசம்பர் | 56 | - | 9 | 17 | 82 |
| **மொத்தம்** | **314** | **48** | **183** | **167** | **712** |

ITI - விவசாயத் தொழில்நுட்ப நிறுவனம், SLSI - இலங்கை நியமங்கள் கட்டளை நிறுவகம், SGS - சமூகப் பொது சேவியலன்ஸ் Society General Surveillance, B&B - பம்பர் என்ட் ப்ரூஸ்

- **தரப் பகுப்பாய்வு செய்யப்பட்ட பசளையின் அளவு (மெ.டொ)**

| பசளை வகை | மொத்தம் |
|---|---|
| யூரியா | 396,888.80 |
| மியுரியேட் ஒப் பொட்டாசியம் | 144,676.74 |
| கலப்பு உன்னத பொசுபேற்று | 109,708.41 |
| தனி உன்னத பொசுபேற்று | - |
| அமோனியம் சல்பேற்று | 74,334.05 |
| கீசரைட்டு | 10,517.87 |
| நாக சல்பேற்று | 1,438.00 |
| டை அமோனியம் பொசுபேற்று | 4,576.08 |
| கல்சியம் அமோனியம் நைதரசன் | 100.00 |
| எப்சம் உப்பு | 784.27 |
| பொட்டாசியம் சல்பேற்று | 332.99 |
| கல்சியம் நைதரசன் | 337.00 |
| கடல் தாவரச் சாறு (லீற்றர்) | 4,520.60 |
| கடல் தாவரச் சாறு | 10.01 |
| திரவப் பசளை | 241,221.80 |
| கலப்புப் பசளை | 4,879.25 |

### 3. பசளையின் தேவையைக் கண்டறிந்து விநியோகிக்கும் பிரிவு

2011/ 2012 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகம் ஆகியவற்றுக்கான நெல் பயிரிடப்படும் காணியின் அளவுகளினதும் பசளை சிபாரிசுகளினதும் அடிப்படையில் பசளைத் தேவை மதிப்பிடப்பட்டு அந்தப் பசளை விநியோகப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**2012 / 2013 பெரும்போகம்**

| விடயம் | பாரிய நீர்ப்பாசனம் | சிறிய நீர்ப்பாசனம் | மழை நீர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பயிர் இலக்கு (ஹெக்.) | 336,570 | 207,041 | 209,821 | 753,432 |

| விடயம் | யூரியா (மெ.டொ) | ரீ.எஸ்.பி (மெ.டொ) | எம்.ஓ.பி (மெ.டொ) | மொத்தம் (மெ.டொ) |
|---|---|---|---|---|
| பசளைத் தேவை | 166,556.23 | 57,313.73 | 50,242.33 | 274,112.29 |
| பசளை விநியோகம் | 143,476.35 | 46,980.35 | 40,011.89 | 230,468.59 |

**2012 சிறுபோகம்**

| விடயம் | பாரிய நீர்ப்பாசனம் | சிறிய நீர்ப்பாசனம் | மழை நீர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பயிர் இலக்கு (ஹெக்.) | 302,175 | 151,965 | 82,820 | 536,960 |

| விடயம் | யூரியா (மெ.டொ) | ரீ.எஸ்.பி (மெ.டொ) | எம்.ஓ.பி (மெ.டொ) | மொத்தம் (மெ.டொ) |
|---|---|---|---|---|
| பசளைத் தேவை | 130,154.75 | 44,438.70 | 40,680.98 | 215,274.43 |
| பசளை விநியோகம் | 90,868.10 | 29,761.57 | 26,050.24 | 146,679.91 |

அரசாங்கப் பண்ணைகள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பவற்றுக்குச் சொந்தமான வயல் காணிகளில் பயிர்ச் செய்வதற்கான நிவாரணத்தின் அடிப்படையில் பசளை விநியோக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**2012 சிறுடீபாகம்**

| பயிர் இலக்கு (ஹெக்.) | யூரியா (மெ.டொ) | ரீ.எஸ்.பி (மெ.டொ) | எம்.ஓ.பி (மெ.டொ) | மொத்தம் (மெ.டொ) |
|---|---|---|---|---|
| 1,161.10 | 229.25 | 75.70 | 65.87 | 370.82 |

**2012-2013 பெரும்பொகம்**

| பயிர் இலக்கு (ஹெக்.) | யூரியா (மெ.டொ) | ரீ.எஸ்.பி (மெ.டொ) | எம்.ஓ.பி (மெ.டொ) | மொத்தம் (மெ.டொ) |
|---|---|---|---|---|
| 3,317.95 | 808.35 | 278.05 | 219.00 | 1,305.40 |

| விடயம் | யூரியா (மெ.டொ) | ரீ.எஸ்.பி (மெ.டொ) | எம்.ஓ.பி (மெ.டொ) | மொத்தம் (மெ.டொ) |
|---|---|---|---|---|
| 2012 சிறுபோகம் | 90,868.10 | 29,761.57 | 26,050.24 | 146,679.91 |
| 2012/2013 பெரும்போகம் | 143,476.35 | 46,980.35 | 40,011.89 | 224,468.59 |

### 4. பசளை இறக்குமதி, களஞ்சியக் கட்டுப்பாடு மற்றும் நிவாரண நிருவாகப் பிரிவு

- அரசாங்க உரக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விடயம் | யூரியா (மெ.டொ) | ரீ.எஸ்.பி (மெ.டொ) | எம்.ஓ.பி (மெ.டொ) |
|---|---|---|---|
| 2012.01.01 ஆம் திகதி காணப்பட்ட களஞ்சிய நிலை | 62,424.91 | 32,058.93 | 38,272.46 |
| 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் வரையான இறக்குமதி | 286,831.19 | 80,374.37 | 60,838.88 |
| 2012.12.31 ஆம் திகதி வரையான பகிர்ந்தளிப்புகள் | 269,475.26 | 88,652.99 | 75,964.89 |
| 2012.12.31 ஆம் திகதிக்கான களஞ்சியங்கள் நிலை | 79,780.84 | 23,780.31 | 23,146.45 |

- தனியார் உரக் கம்பனிகளுக்குச் சொந்தமான களஞ்சிய நிலை பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விடயம் | யூரியா (மெ.டொ) | ரீ.எஸ்.பி (மெ.டொ) | எம்.ஓ.பி (மெ.டொ) |
|---|---|---|---|
| 2012.01.01 ஆம் திகதி காணப்பட்ட களஞ்சிய நிலை | 32,168.51 | 4,658.53 | 29,223.24 |
| 2012 ஆம் ஆண்டு நவம்பர் வரையான இறக்குமதிகள் | 155,462.91 | 30,172.70 | 85,272.93 |
| 2012.11.30 ஆம் திகதி வரையான பகிர்ந்தளிப்புகள் | 159,514.34 | 30,813.77 | 90,745.67 |
| 2012.11.30 ஆம் திகதிக்கான களஞ்சிய நிலை | 4,435.21 | 1,956.93 | 5,623.05 |

- பசளை நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விடயம் | 2012.12.31 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட்ட தொகை (ரூ.மில்.) |
|---|---|
| நெற் பசளை நிவாரணம் | 20,165.95 |
| தேயிலைப் பசளை நிவாரணம் | 2,181.31 |
| தென்னைப் பசளை நிவாரணம் | 625.60 |
| ஏனைய விவசாயப் பெருந்தோட்டப் பயிர்களுக்கான பசளை நிவாரணம் | 13,483.44 |
| **மொத்தம்** | **36,456.30** |

- பசளைக் கொள்வனவு தொடர்பில் பின்வரும் கூட்டங்கள் நடாத்தப்பட்டு உரிய பொறுப்புக்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

| **குழு** | **கூட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| அமைச்சரவை நியமித்த நிலையியல் கொள்வனவுத் திட்டமிடல் குழு | 09 |
| ஒவ்வொரு காலாண்டிற்கும் பசளையின் வர்த்தக விலையை நிர்ணயிக்கும் குழு | 04 |

- 2013 ஆம் ஆண்டிற்கு இறக்குமதி செய்வதற்கு எனத் திட்டமிடப்பட்ட பசளை அளவு (விபரம்) கீழே

| **விடயம்** | **யூரியா (மெ.டொ)** | **ரீ.எஸ்.பி (மெ.டொ)** | **எம்.ஓ.பி (மெ.டொ)** |
|---|---|---|---|
| வருடாந்தப் பசளைத் தேவை | 508,250.00 | 143,500.00 | 233,500.00 |

தரப்பட்டுள்ளது.

- 2013 ஆம் ஆண்டிற்கான பசளை நிவாரணம் தொடர்பில் மதிப்பிடப்பட்ட தொகை 70,000.00 மில்லியன் ரூபா ஆகும்.
- கொள்வனவு தொடர்பில் பின்வரும் குழுக் கூட்டங்களை 2013 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| **குழு** | **கூட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| அமைச்சரவை நியமித்த நிலையியல் கொள்வனவுத் திட்டமிடல் குழு | 09 |
| ஒவ்வொரு காலாண்டிற்கும் பசளையின் வர்த்தக விலையை நிர்ணயிக்கும் குழு | 04 |

### 5. சட்ட மற்றும் விசாரணைப் பிரிவு

- 704 பசளை இறக்குமதி சந்தர்ப்பங்கள் பற்றிய பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது.
- இறக்குமதி செய்யப்பட்ட திரவப் பசளை மற்றும் கலப்புப் பசளைகள் சிலவற்றின் ஆக்கக்கூறுகள் சரியான விதத்தில் பிரதிபலிக்கப்படும் வகையில் தகவல்களை வெளிப்படுத்தி விற்பனை செய்வதற்கான ஒரு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான 54 பசளை இறக்குமதி சந்தர்ப்பங்கள் தொடர்பில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- பசளைப் பாவனைத் துறையில் நிகழக்கூடிய மோசடிகள் மற்றும் முறைகேடுகள் என்பவற்றைக் குறைக்கும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு பொலன்னறுவை, அனுராதபுரம், மாத்தளை, காலி, குருனாகல், கம்பஹா, கண்டி, நுவரெலியா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களின் விசாரணை விடயங்கள் மேற்கொள்ளப் பட்டன. 147 கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் கூட்டுத்தாபனங்களின் உத்தரவு பெற்ற 197 பிரதிநிதித்துவ நிறுவனங்கள் என்பன அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டு 8 இறக்குமதி விடயங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- பசளை ஒழுங்குறுத்தல் சட்டத்தின் சட்டஏற்பாடுகள் பற்றி பொது மக்களுக்கும் ஊழியர்களுக்கும் விழிப்பூட்டும் பொருட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளன. தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் போலிஸ் அலுவலர்களை விழிப்பூட்டுவதற்கும் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## சேதனப் பசளையின் உற்பத்தியையும் பாவனையையும் பிரபல்லியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்

| செயற்பாடு | அனுராதபுரம் | | பொலன்னறுவை | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| பதிவுசெய்யப்பட்டுள்ள சேதனப் பசளை உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை | 650 | 694 | 300 | 198 |
| பதிவுசெய்யப்பட்டுள்ள சேதனப் பசளை உற்பத்தித் தரப்புகளின் எண்ணிக்கை | 19,500 | 20,820 | 7,500 | 2,470 |
| சேதனப் பசளை உற்பத்தித் தரப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ள விவசாய உபகரணப் பொதிகளின் எண்ணிக்கை | 20,000 | 26,500 | 8,000 | 3,470 |
| சேதனப் பசளை உற்பத்தித் தரப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ள புல் வெட்டும் இயந்திரங்களின் எண்ணிக்கை | 650 | 600 | 300 | 198 |
| விநியோகிக்கப்பட்டுள்ள தகடுகள் பண்ணப்பட்ட கூடாரங்களின் எண்ணணிக்கை * | 650 | 155 | 300 | - |
| பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள எப்பாவெல ரொக் பொசுபேற்றின் அளவு (மெ.டொ) * | 1,000 | 202.5 | 400 | - |
| பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள பொலித்தீன்களின் அளவு (கி.கி) ** | 70,000 | 17,500 | 28,000 | 2,500 |
| நடாத்தப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 40 | 44 | 11 | 14 |
| 2012 / 2013 பெரும்போகத்திற்காக உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளையின் அளவு (மெ.டொ) | 20,000 | 20,000 | 8,000 | 1,900 |
| நன்மை பெறும் நெல் விவசாயிகளின் எண்ணிக்கை | 130,000 | - | 50,000 | - |

- மேலும் செயற்படுத்தப்படுத்தப்பட்டு வருகின்றது.

# வ/ப இலங்கை உரக் கூட்டுத்தாபனம்

# வ/ப இலங்கை உரக் கூட்டுத்தாபனம்

## தூரநோக்கு

“இலங்கையின் பசளைச் சந்தையின் முன்னோடி என்ற ரீதியில் விவசாயத் துறை மற்றும் அதனுடன் இணைந்த உற்பத்திகள், சேவைகள் மற்றும் உள்ளீடுகள் என்பவற்றை விநியோகிக்கும் பல வகையில் புதிய உலகத்திற்கு ஏற்ற விதத்தில் முன்னோடி நிறுவனமாகத் திகழ்தல்”

## செயற்பணி

“அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க லக்பொஹரக் குடும்பத்தின் உச்ச பங்களிப்பில் இலங்கையின் விவசாய மற்றும் கமநல சேவைகள் துறையின் உற்பத்தி, வருமானம் மற்றும் இலாபம் என்பவற்றை அதிகரிக்கும் வகையில் பலதரப்பட்ட சந்தைத் தேவைகளுக்கு ஏற்ற விதத்திலான பசளை உற்பத்தி மற்றும் விற்பனை என்பவற்றினூடாக கூட்டுத்தாபனத்தின் இலபகரமான நிலைபெறுதகு நிலையைப் பேணி உறுதிசெய்தல்”

## 2012 ஆம் ஆண்டு செயற்படுத்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- **ஒரு பசளைக் களஞ்சியசாலை நிர்மாணம்**




கமநல சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு கட்டிடம் புனரமைக்கப்பட்டதன் மூலம் 537 சதுர அடி கொண்ட ஒரு காணித் துண்டில் 1500 மெ.டொ கொள்திறனுடைய ஒரு பசளைக் களஞ்சியசாலை களுத்துறை மாவட்டத்தின் வலல்லாவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில் 371,685 ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது.

- **ஓய்வு நிலையப் புனரமைப்பு**

பொலன்னறுவைப் பிரதேசம் சமய மற்றும் சுற்றாடல் ஆகியன ரீதியில் புகழுக்கு உரிமை கோருகின்ற ஒரு இடம் என்பதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் நிறைந்த 03 சுற்றுலா பங்களாக்கள் பொலன்னறுவைப் பிராந்தியக் களஞ்சியசாலைக் கட்டிடத்தில் 4.1 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது.







### பசளை நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்

| நிதி (ரூ.மில்.) நிவாரணத்தின் பெறுமானம் | நிதி இலக்கு | நிதி | | வருடாந்தப் பௌதீக இலக்கு (மெ.டொ) | 2012.12.31 ஆம் திகதிக்கான பௌதீக இலக்கு | பௌதீக | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முன்னேற்றம் (ரூ.மில்.) | % | | | முன்னேற்றம் (மெ.டொ) | % |
| 2,061.61 | 2,061.61 | 1,987.87 | 96 | 294,515 | 294,515 | 283,982 | 96 |

### நெல் நிவாரணப் பசளை விற்பனை

- நெல் பசளை நிவாரணத்தின் கீழ் 2011 / 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 306,691 மெ.டொ அளவான பசளைகள் விற்பனை செய்யப்பட்டன.
- 2011.05.26 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய சகல பயிர்களுக்குமான நிவாரணப் பசளையைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அரசாங்க மற்றும் தனியார் ஆகிய துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப பசளைகளைப் பெற்றுக் கொடுத்து போட்டித்தன்மை வாய்ந்த சந்தையினுள் இயங்கிய அதிகளவான நெற் சந்தைப் பங்குகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நிறுவனத்தினால் முடியந்துள்ளது. 2011 /2012 நிதியாண்டுக்கு 23,656 மெ.டொ அளவான பசளை விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த விற்பனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 326% வீதமான ஒரு அதிகரிப்பாகும்.

**2012.12.31 ஆம் திகதிக்கான நிவாரணப் பசளைப் பகிர்ந்தளிப்பு**

| மாவட்டம் | களஞ்சியசாலை | (மெ.டொ) |
|---|---|---|
| கொழும்பு | ஹுனுப்பிட்டிய | 14 565.86 |
| களுத்துறை | தொடங்கொட | 313.30 |
| | பெலவத்த | 128.85 |
| | மத்துகம | 746.73 |
| கண்டி | கம்பளை | 178.30 |
| | கடுகண்ணாவ | 6.50 |
| மாத்தளை | தம்புள்ள | 438.56 |
| | மாத்தளை | 633.45 |
| | நாகொல்ல | 887.60 |
| நுவரெலியா | நுவரெலியா | 389.90 |
| | ரிக்கில்லகஸ்கடை | 792.20 |
| காலி | கொக்கல | 575.15 |
| மாத்தறை | அக்குரஸ்ஸ | 1 104.75 |
| | மெதவியன்கொட | 1 125.75 |
| அம்பாந்தோட்டை | பட்டஅத்த | 1 396.35 |
| | தெஹிகஹலந்த | 1 389.20 |
| | வீரவில | 5 003.80 |
| | வீரகெட்டிய | 2 022.75 |
| | சூரியவெவ | 2 807.10 |
| குருனாகல் | குருனாகல் | 1 452.40 |
| | மாகோ | 1 969.70 |
| | பொல்கஹவெல | 1 417.35 |
| | சந்தலங்கா | 1 375.80 |
| | குளியாப்பிட்டி | 1 572.35 |
| புத்தளம் | நாத்தாண்டி | 729.89 |
| | ஆணமடுவை | 1 281.35 |
| இரத்தினபுரி | குருவிட்ட | 508.30 |
| | எம்பிலிப்பிட்டிய | 3 116.60 |
| கேகாலை | கேகாலை | 568.35 |
| பதுளை | பதுளை | 497.30 |
| | பண்டாரவளை | 90.00 |
| | வெலிமடை | 762.25 |
| | மஹியங்கனை | 5 414.44 |
| மொனராகலை | மொனராகலை | 2 335.30 |
| | வெல்லவாய | 1 024.65 |
| | பிபிலை | 509.35 |
| அனுராதபுரம் | ரக்வான | 1 224.95 |
| | நொச்சியாகம | 3 398.00 |
| | தலாவ | 4 197.15 |
| | ஹொரவப்பொத்தான | 2 168.65 |
| | பதவிய | 1 830.50 |
| | மதவாச்சி | 4 035.35 |
| பொலன்னறுவை | பொலன்னறுவை | 9 044.75 |
| | மெதிரிகிரிய | 4 206.70 |
| | வெலிக்கந்தை | 3 738.50 |
| | ஹிங்குராக்கொட | 2 861.15 |
| மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 4456.50 |
| அம்பாறை | அம்பாறை | 4976.05 |
| | சம்மாந்துறை | 3933.85 |
| | பொத்துவில் | 847.60 |
| | அக்கரைப்பற்று | 1 883.95 |
| | தெஹியத்தக்கண்டிய | 2 306.06 |
| திருகோணமலை | திருகோணமலை | 1931.35 |
| | கந்தளாய் | 1 959.40 |
| யாழ்ப்பாணம் | கோன்டாவில் | 895.55 |
| முல்லைத்தீவு | ஓளுமடு | 1 938.25 |
| | | **120 965.74** |

## நிறுவனம் சார்ந்த முன்னேற்றம்

- கூட்டுத்தாபனத்தின் ஹுணுப்பிட்டிய களஞ்சியசாலைக் கட்டிடத்தொகுதி மற்றும் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள 22 ஏக்கர் காணி ஆகியன மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் ஒரு விடுவிப்புப் பத்திரத்தின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு உரிமை மாற்றிப் பெறப்பட்டுள்ளன.

- வ/ப இலங்கை உரக் கூட்டுத்தாபனம், அரசாங்கத் தொழில்முயற்சித் தரப்படுத்தல் நடைமுறையின் கீழ் 2011.04.29 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் பொதுத் திறைசேரியினால் C தொகுதியில் இருந்து B தொகுதிக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

- “லக்பொஹர” என்ற வர்த்தகப் பெயரையும் சின்னத்தையும் உத்தியோகபூர்வ ரீதியில் புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் பதிவு செய்து “அந்த வர்த்தகப் பெயர்” மற்றும் “இலட்சினை” ஆகியவற்றின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

- கூட்டுத்தாபனத்தில் 2011-2015 வரை ஒன்றிணைந்த முழுமொத்த மற்றும் 2011 - 2013 வரையான செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

- வருடாந்தக் கொள்வனவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளன.

- வருடாந்தக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

- கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் அடங்கிய அறிக்கைகள் உரிய நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. 2012.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் ஆளணிக்கும் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதே போன்று சகல ஆட்சேர்ப்புகளும் பதவியுயர்வுகளும் பணிப்பாளர்கள் சபையின் அனுமதிக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றன.

- கூட்டுத்தாபனத்தின் சேவைகள் மற்றும் நிருவாகம் ஆகிய விடயங்கள் தொடர்பில் சர்வதேச ISO 9001:2008 தரச் சான்றிதழ் கிடைக்கப் பெற்றுள்ளது.



- கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களினது வினைத்திறனை அதிகரிப்பதற்காக ஐந்து எண்ணக்கருக்கள் அடங்கிய உற்பத்தி எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்ட ஒரு உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொரு பிரிவையும் உள்ளடக்கி செயற்படுத்தப்பட்டுள்ளது. (2012 உற்பத்தித்திறன் விருதுக்காக நிறுவனம் தற்பொழுது செயற்பட்டு வருகின்றது).

- கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இரசாயன ஆய்வுகூடத்தை தேசிய மட்டச் சான்றிதழ் பெற்ற ஒரு ஆய்வு கூடமாக மாற்றும் நடவடிக்கை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதுடன் அதற்கான ISO/IEC 17025:2005 தேசிய தரச் சான்றிதழும் பெறப்பட்டுள்ளது. அதே போன்று இலங்கை நியமங்கள் சபையினால் அங்கீகரிக்கப் பட்ட பசளை சம்பந்தமான பரிசோதனையை மேற்கொள்ளக்கூடிய இலங்கையின் மூன்று அரசாங்க நிறுவனங்களுக்கு இடையில் சேரக்கூடிய சந்தர்ப்பமும் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. (SLSI, ITI, CFC)



- 2007 ஆம் ஆண்டளவில் 330 மில்லியன் மறைப் பெறுமானத்தில் இயங்கிய இலங்கை உரக் கூட்டுத்தாபனம் 2011/2012 ஆம் ஆண்டளவில் 543 மில்லியன் ரூபா நேர் பெறுமானம் வரை அதிகரிக்க முடிந்தது.
- 2009 ஆம் ஆண்டு 03 மில்லியன் ரூபாவும், 2010 ஆம் ஆண்டு 03 மில்லியன் ரூபாவும், 2011 ஆம் ஆண்டு 09 மில்லியன் ரூபாவும் என பொதுத் திறைசேரிக்கு பங்குலாபங்கள் செலுத்தப்பட்டுள்ளன.
- 2009 - 2010 ஆம் ஆண்டு முதல் 2011 - 2012 ஆண்டு வரை முறையே 35 மில்லியன் ரூபாவும், 43.6 மில்லியன் ரூபாவும், 50.2 மில்லியன் ரூபாவும் என அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்தப்பட்டுள்ளன.
- நிறுவன வரலாற்றில் வரிக்கு முன்னர் அதிக இலாபமாக 2012 ஆம் ஆண்டில் 95 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டதாகப் பதிவாகியுள்ளது.
- 2011 / 2012 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் விடயத்தினுள் வரிக்கு முன்னர் 95.4 ரூபா இலாபத்தை ஈட்ட முடிந்தது. இதற்கு முன்னர் 2010 / 2011 ஆம் ஆண்டுகளிலும் வரிக்கு முன்னரான இலாபம் 73.9 மில்லியன் ரூபா எனப் பதிவாகியிருந்தது.
- ஹுணுப்பிட்டிய, பொலன்னறுவை ஆகிய பிரதான களஞ்சியசாலைக் கட்டிடங்கள் உட்பட நாடு முழுதிலும் 54 களஞ்சியசாலைகளைக் கொண்ட களஞ்சியசாலை வலையமைப்பின் கொள்திறன் 150,000 மெ.டொ ஆகும். நாடு முழுதிலும் தாபிக்கப்பட்டுள்ள லக்பொஹரக் களஞ்சியசாலை வலையமைப்பின் மூலம் 376 கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற நெல் நிவாரணப் பசளையை உரிய காலத்தில் விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- பொலன்னறுவைப் பிராந்திய களஞ்சியசாலைக் கட்டிடத்தொகுதியினுள் நீண்டகாலமாகப் பாவனையில் ஈடுபடுத்தப்படாதிருந்த 04 கட்டிடங்கள் ஊழியர்களின் சிரமதான ஒத்துழைப்பில் புனரமைக்கப்பட்டு 04 ஓய்வு நிலையங்களாக மாற்றப்பட்டன. கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு விஷேட சலுகை விலைகளிலும் வெளிக்களத் தரப்புகளுக்கு வர்த்தகக் கட்டணங்களிலும் பசளைகளை ஒதுக்கிக்கொள்ளுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இது இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு மேலதிக வருமானத்தை ஈட்டும் ஒரு உபாயமாகும்.
- தாவரரங்களின் உற்பத்தித்திறனின் பொருட்டு ஹுணுப்பிட்டிய அலுவலக வளாகத்திலுள்ள லக்பொஹர விவசாயப் பண்ணைகளின் சகல பிரிவுகளும் அடங்கலாக சோதனப் பசளை மாத்திரம் பயன்படுத்தப்படும் ஒரு முன்மாதிரிப் பண்ணையாக அபிவிருத்தி செய்யப்பட்டு நிருவகிக்கப்பட்டு வருகின்றன.
- மின்சக்தி நுகர்வைக் குறைத்து அதன் மூலம் மின்சக்தியைச் சேமிப்பதற்கான ஒரு முறையியல் தயாரிக்கப் பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது.

**ஏனைய பயிர் நிவாரணப் பசளை விற்பனை**

- அரசாங்கத்தின் திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக நகரப் பகுதித் தோட்டப் பயிர்களை இலக்காகக் கொண்டு 500 கிராம் நிறையுடைய க்ரடா பசளை உறை ''மினி பெக்'' என்ற பெயரில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே சுப்பர் மார்க்கெட்டுக்களிலிருந்தும் மற்றும் அரசாங்கத்தின் பல வர்த்தகக் கூட்டுத்தாபனங்களின் காட்சி அறைகளிலிருந்தும், அவற்றுடன் இணைந்த விற்பனை நிலையங்களிலிருந்தும், லக்பொஹர விற்பனை வலையமைப்பிலிருந்தும் இந்த ''மினி பெக்'' பசளையை விலைக்கு வாங்கலாம்.

**மனித வளங்கள் நலனோம்புகை மற்றும் இனப்பெருக்கம் தொடர்பில் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

- ஊழியர்களுக்கு சர்வதேச சான்றிதழ் உடைய ஒரு கணனி டிப்ளோமா பாடநெறி (ICDL) தொடர்பில் நிறுவனத்தின் நிதி உதவியை வழங்குதல்.

- கூட்டுத்தாபனத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்குச் சொந்தமற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய பிரிவுகளின் ஊழியர்களுக்காக நடாத்தப்பட்ட கணனி மென்பாக வலையமைப்பு விடயம் பற்றிய ஒரு டிப்ளோமா பாடநெறி தொடர்பில் வசதிகளை ஏற்பாடு செய்தல்.

- தலைமை அலுவலகத்தினதும் பிராந்திய களஞ்சியசாலைக் கட்டிடத்தொகுதியினதும் ஊழியர்களின் போக்குவரத்து வசதி நிமித்தம் அலுவலகப் போக்குவரத்து வசதிகளை இலவசமாக வழங்குதல்.

- உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தித்திறன் எண்ணக்கரு ஆகியன பற்றிய வேலையரங்குகளை நடாத்துதல்.

- இரசாயனப் பதார்த்தங்களின் நுகர்வு மற்றும் இரசாயனப் பதார்த்தங்களின் பாவனை ஆகிய விடயங்களில் எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பசளை மையச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஊழியர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களில் அவர்களைப் பங்குபற்றச் செய்தல்.

- விநியோகங்கள் மற்றும் திண்ம முகாமைத்துவம் தொடர்பில் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட களஞ்சியப்படுத்தல் பற்றிய பாடநெறியிலும் மற்றும் இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகத்தினால் கொள்வனவு முகாமைத்துவம் பற்றி நடாத்தப்பட்ட ஒரு சான்றிதழ் பாடநெறியிலும் கொள்வனவுப் பிரிவின் ஊழியர்களைப் பங்குபற்றச் செய்தல்.

- இலங்கை ஊழியர் முகாமைத்துவ நிறுவகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான மாநாட்டில் கூட்டுத்தாபனத்தைப் பிரதிநிதிப்படுத்தி மனித வளங்களுக்கான முகாமையாளர் அடங்கலாக முகாமையாளர்களைப் பங்குபற்றச் செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் சகல நிறைவேற்றுத் தரங்களிலும் மற்றும் முகாமைத்துவத் தரங்களிலும் உள்ள ஊழியர்களின் குழுச் செயற்பாடுகளை அதிகரித்தல், மனோபாவத்தை வளர்த்தல் மற்றும் தீர்மானமெடுத்தல் ஆற்றலை அதிகரித்தல் முதலிய நோக்கங்களைக் கொண்டு இரண்டு நாட்கள் நாவுல தேசிய இளைஞர் படையணி நிலையத்தில் நடாத்தப்பட்ட "Out Bound Training" என்ற ஒரு வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்தில் பங்குபற்றச் செய்தல்.

வீதிச் சட்டங்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் தொழில்நுட்பப் பராமரிப்பு ஆகியன தொடர்பில் போக்குவரத்து உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோருக்கான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று ஓய்வுபெற்ற பிரதிப் போலிஸ் மாஅதிபர் ரீ. பேரின்பநாதன் அவர்களின் வளப் பங்களிப்பில் கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டது.

- இலங்கைச் சுங்கத் தீர்வைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நிறுவனம் மற்றும் விடுவிப்பு பற்றிய புதிய முறையியல்கள் தொடர்பான ஒரு வேலையரங்கில் கொள்வனவுப் பிரிவின் ஊழியர்களைப் பங்குபற்றச் செய்தல்.
- கூட்டுத்தாபனத்தினால் ஊழியர்களுக்காக நடாத்தப்படுகின்ற பொதுவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தவிர அவர்களின் உரிய துறைகளில் வேறு தொழில் சார்ந்த பயிற்சி வேலை நிகழ்ச்சித்திட்டங்களில் அவர்களைப் பங்குற்றச் செய்தல்.
- வியத் விரிவுரை மாநாட்டின் மூலம் ஊழியர்களின் உளப் பண்புகளை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ஊழியர்களின் உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் ஒரு உடலியல் பயிற்சி அலகைத் தாபித்தல்.
- ஊழியர்களுக்கான ஒரு விளையாட்டுச் சங்கத்தைத் தாபிப்பதற்குத் தேவையான விளையாட்டுப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- இடர் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு உதவியை வழங்கக்கூடிய ஒரு 'இடர் நிதியத்தை' தாபித்தல்.
- ஊழியர்களின் நீண்டகால சேவையை மதிக்கும் வகையில் அவர்களுக்கு தங்கப் பதக்க விருதுகளை வழங்குதல்.
- ஊழியர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்துவதற்கான ஒரு பயிற்சிப் பாடநெறியை முன்னெடுத்தல்.





- பசளை மற்றும் பசளைப் பாவனை பற்றி நிறுவனத்தின் விற்பனை அணியை விழிப்பூட்டும் பொருட்டு பேராதெனிய விவசாய பீடத்துடன் இணைந்து ஒரு பயிற்சி வேலையரங்கை நடாத்துதல்.
- "கைஸன் எண்ணக்கரு" பற்றி விழிப்பூட்டும் வேலையரங்குகளை நடாத்துதல்.
- தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் தாவர உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தில் ஊழியர்களைப் பங்கு பற்றச் செய்தல்.
- இலங்கை நிமயங்கள் கட்டளைகள் நிறுவகத்தின் மூலம் நடாத்தப்பட்ட குழுச் செயற்பாடுகள் மற்றும் உற்பத்தித்திறன் வட்டம் ஆகியவற்றினூடாக ஊழியர்களுக்கான நிறுவனமும் உற்பத்தித்திறனும் பற்றிய வேலையரங்குகளை நடாத்துதல்.
- சுகாதாரப் பாதுகாப்பு வாய்ந்த ஒரு சுற்றாடலை ஏற்படுத்துதல்.
- கூட்டுத்தாபன வளாகத்தை முறையாகப் பேணிச் செல்வதன் மூலம் ஊழியர்களுக்கு சிறந்த ஒரு நிறுவனத்தில் பணி புரிவதனால் கிடைக்கும் திருப்தியைப் பெற்றுக் கொடுத்தல்.

- பொலன்னறுவை களஞ்சியசாலைக் கட்டிடத்தொகுதியின் பராமரிப்புப் பணிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைப்பதற்கான ஒரு தொழில்நுட்பப் பிரிவைத் தாபித்தல்.





- www.lakpohora.lk என்ற இணையத்தளத்தை அபிவிருத்தி செய்வதற்கும் புதிய இணையத்தளத்தை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.




- நிலையான சொத்துக்களை நிருவகிப்பதற்கான ஒரு மென்பாகத்தை அறிமுகம் செய்து அதனைப் பேணிச் செல்லல்.
- மனித வளங்கள் முகாமைத்துவ மென்பாக முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- மூன்றாந் தரப்புக் கொடுப்பனவுகளை “E Transfer” மூலம் மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
- இலங்கை ரெலிகம் நிறுவனமும் டயலொக் கம்பனியும் இணைந்து முழு நாடும் உள்ளடங்கும் வகையில் அலுவலகம் மற்றும் களஞ்சிய முறைமை ஆகின ஒன்றுடனொன்று தொடர்புபடும் வகையில் தொடர்பாடல் வசதிகளை விஸ்தரித்தல். இதன் மூலம் செலவுகளைக் குறைக்க இயலுமை இங்கு விஷேடத்துவம் பெறுகின்றது.

## சமூக நலச் செயற்பாடுகள்

- தேசிய கமக்காரர் வாரத்திற்கு இணையாக ‘லக்பொஹர துவிச்சக்கர வண்டி’ ஊர்வலத்தை நடாத்தி விளையாட்டுத் துறைக்கு கைகொடுத்தல்.
- ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்ற மாணவர்களுக்கு ஒரு மாதிரி வினாத்தாள் பொதியை இலவசமாகப் பெற்றுக் கொடுத்தல்.
- மாணவ மாணவிகளுக்கு கல்விப் புலமைப்பரிசில்களை வழங்குதல்.
- வருடாந்த பொசன் போயா தினத்தில் பெரும் சோற்று அன்னதானம் வழங்குதல்.

- "நாம் பயிர் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைபெற்ற தோட்டப் பயிர்ச் செய்கை சார்ந்த போட்டிகளில் களணிப் பிரதேச செயலாளர் பிரிவின் அரச துறை முதலிடம் ஆண்டு தோறும் இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகியுள்ளது.
- "திவிநெகும" என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபன வளாகத்தினுள் ஒரு விவசாயப் பண்ணை முறைமை செயற்படுத்தப்பட்டுள்ளது.



# வ/ப கொழும்பு வர்த்தக உரக் கம்பனி

# வ/ப கொழும்பு வர்த்தக உரக் கம்பனி



## தூரநோக்கு

“விவசாயத்திற்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் தாமதியாது உற்பத்தி செய்து அவற்றைப் பகிர்ந்தளிப்பதனூடாக இலங்கையின் விவசாயத் துறைக்கு நேர்மனோபாவ பங்களிப்பை நல்குவதன் மூலம் அரச துறையில் ஒரு முன்மாதிரி நிறுவனமாக இயங்குதல்”

## செயற்பணி

“இலங்கையின் முன்னோடிப் பசளை உற்பத்தி மற்றும் பகிர்ந்தளிப்பு சார்ந்த தரப்பாக மாறி அரசாங்கத்தின் விவசாயம் தொடர்பான தூரநோக்கின் பெருமைப் பங்காளர் தரப்பாகத் திகழ்ந்து பலதரப்பட்ட உற்பத்தி வகைகளில் உயர்ந்த தர உற்பத்திகளை வெளிப்படுத்துதல் மற்றும் நிறுவனத்தின் பங்காளர்களின் தேவைக்கு ஏற்ப தொழிற்பட்டு ஒரு சுயாதீன நிறுவனமாக இயங்குவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல்”

## 2012 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

### 1. 2012 தேசத்திற்கு மகுடம் என்ற தேசிய அபிவிருத்திக் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக ஒரு பசளைக் களஞ்சியசாலையை நிர்மாணித்தல்



2012 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் என்ற தேசிய அபிவிருத்திக் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக அனுராதபுர மாவட்டத்தின் மிகிந்தலை–சீப்புக்குளம் என்ற கிராமத்தில் 7,200 சதுர அடிப் பரப்பளவைக் கொண்ட 2,500 மெ.டொ கொள்திறனுடைய 13.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பசளைக் களஞ்சியசாலை 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

### 2. நிருவாகக் கட்டிட நிர்மாணம்

இந்த நிறுவனம் 1994 ஆம் ஆண்டு தனியார்மயப்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும் 1996 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு உரிமை மாற்றிப் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் நிறுவனத்தின் நிருவாக விடயங்களை நிருவகித்துச் செல்வதற்கான ஒரு நிருவாகக் கட்டிடத்தின் கடும் தேவை இருந்தது. இதற்கு ஒரு பரிகாரமாக 10,000 சதுர அடி கொண்ட 44 மில்லியன் ரூபா செலவில் ஒரு இரண்டு மாடி நிருவாகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணிகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் அந்தப் பணிகள் நிறைவு செய்யப் படவுள்ளன. இதற்குத் தேவையான நிதி, நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து ஈட்டப்பட்டது.

### 3. ஒரு பசளைக் களஞ்சியசாலையை நிர்மாணித்தல்



பசளைத் தேவையில் 35% வீதமான அளவை கமநல சேவைகள் நிலையத்திற்கு விநியோகிக்கின்ற போது இந்த நிறுவனத்திற்குச் சொந்தமான களஞ்சிய வசதிகளின்மையானது நிறுவனம் தற்பொழுது எதிர்நோக்கியுள்ள ஒரு முக்கிய சவாலாகும். இதற்குப் பரிகாரமாக 22,000 சதுர அடி கொண்ட 8000 மெ.டொ களஞ்சியக் கொள்திறனுடைய 61 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்ட செலவில் ஹுணுப்பிட்டிய பிரதான களஞ்சியசாலைக் கட்டிடத்தொகுதியை அண்மித்த ஒரு காணியில் ஒரு புதிய களஞ்சியசாலையை நிர்மாணிப்பதற்கான நிலம் தயார்படுத்தல் பணி நிறைவடைந்துள்ளது. பொருத்தமான ஒரு கட்டிட நிர்மாண நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு ஏற்கனவே கேள்வி விலைமனுக்கள் அழைக்கப் பட்டு அந்த விடயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான நிதி கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனத்தினாலேயே ஈட்டப்பட்ட நிதி என்பது ஒரு விஷேடத்துவமாகும்.

**2012 நிவாரணப் பசளை விநியோகம் - 2012.12.31 ஆம் திகதிற்கான முன்னேற்றம்**

மஹிந்த சிந்தனை என்ற வேலைத்திட்டத்தின் கீழ் கீழ்காணும் பசளை அளவுகள் அந்தந்த மாவட்டங்களில் 50 கி.கி நிறையுடைய ஒரு பசளை உறை 350/- ரூபா என்ற சலுகை விலையில் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

| மாவட்டம் | பசளை வகை (மெ.டொ) | | | மொத்தம் (மெ.டொ) | விற்பனை வருமானம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | யூரியா | ரீ.எஸ்.பி. | எம்.ஓ.பி. | | |
| கொழும்பு | 222.45 | 99.05 | 180.40 | 501.90 | 3,151,932.00 |
| கம்பஹா | 1,036.05 | 477.40 | 470.80 | 1,984.25 | 12,461,090.00 |
| களுத்துறை | 933.00 | 484.35 | 795.05 | 2,212.40 | 13,893,872.00 |
| கண்டி | 365.15 | 171.80 | 140.45 | 677.40 | 4,254,072.00 |
| மாத்தளை | 1,922.85 | 612.85 | 508.90 | 3,044.60 | 19,120,088.00 |
| நுவரெலியா | 243.15 | 117.60 | 119.65 | 480.40 | 3,016,912.00 |
| காலி | 700.30 | 327.05 | 589.80 | 1,617.15 | 10,155,702.00 |
| மாத்தறை | 1,344.35 | 568.60 | 857.55 | 2,770.50 | 17,398,740.00 |
| அம்பாந்தோட்டை | 5,619.40 | 1,885.20 | 1,583.15 | 9,087.75 | 57,071,070.00 |
| குருனாகல் | 8,522.00 | 2,678.70 | 2,337.65 | 13,538.35 | 85,020,838.00 |
| புத்தளம் | 2,247.50 | 708.90 | 612.65 | 3,569.05 | 22,413,634.00 |
| இரத்தினபுரி | 1,460.20 | 487.80 | 489.45 | 2,437.45 | 15,307,186.00 |
| கேகாலை | 189.95 | 84.55 | 88.55 | 363.05 | 2,279,954.00 |
| பதுளை | 2,967.20 | 1,128.60 | 913.80 | 5,009.60 | 31,460,288.00 |
| மொனராகலை | 4,161.90 | 1,327.75 | 1,122.05 | 6,611.70 | 41,521,476.00 |
| அனுராதபுரம் | 14,121.90 | 4,649.35 | 3,838.45 | 22,609.00 | 141,984,520.00 |
| பொலன்னறுவை | 6,395.30 | 2,111.80 | 1,782.20 | 10,289.30 | 64,616,804.00 |
| மட்டக்களப்பு | 3,097.70 | 1,080.45 | 834.25 | 5,012.40 | 31,477,872.00 |
| அம்பாறை | 14,062.70 | 4,644.00 | 3,698.90 | 22,405.60 | 140,707,168.00 |
| திருகோணமலை | 4,808.40 | 1,566.05 | 1,199.60 | 7,574.05 | 47,565,034.00 |
| வவுனியா | 1,750.00 | 562.50 | 418.75 | 2,731.25 | 17,152,250.00 |
| முல்லைத்தீவு | 1,285.20 | 412.35 | 364.70 | 2,062.25 | 12,950,930.00 |
| மன்னார் | 2,493.05 | 773.65 | 693.00 | 3,959.70 | 24,866,916.00 |
| கிளிநொச்சி | 1,883.75 | 512.00 | 461.50 | 2,857.25 | 17,943,530.00 |
| **மொத்தம்** | **81,832.75** | **27,472.35** | **24,101.25** | **133,406.35** | **837,791,878.00** |

**2012/13 இலக்கு - சிறுபோகம்/பெரும்போகம்**
**நிவாரணப் பசளை விநியோகம்**

வ/ப கொழும்பு வர்த்தக உரக் கம்பனி 2012/13 சிறுபோகத்தில்/பெரும்போகத்தில் பின்வருமாறு பசளையை இறக்குமதி செய்து விநியோகிக்க எதிர்பார்க்கின்றது.

| | |
|---|---|
| யூரியா (மெ.டொ) | 135,088 |
| ரீ.எஸ்.பி. (மெ.டொ) | 34,530 |
| எம்.ஓ.பி. (மெ.டொ) | 30,997 |

# வ/ப மக்கள் உரத் தொழில்முயற்சி

# வ/ப மக்கள் உரத் தொழில்முயற்சி

1987 பொதுத் தொழில்முயற்சிகளைப் பொறுப்பேக்கும் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இந்த நிறுவனம் 1991 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 08 ஆம் திகதிய 649 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் ஒரு கம்பனியாகத் தாபிக்கப்பட்டது. 1982 இன் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2009.11.03 ஆம் திகதி மீண்டும் பதிவுசெய்யப்பட்டது.

வ/ப மக்கள் உரத் தொழில்முயற்சி என்ற இந்தக் கம்பனியின் முழு வளாகமும் பசளைப் பிரிவினால் பசளைகளைக் கலப்பதற்கும் மற்றும் விற்பனைக்கும் பயன்படுத்தப்பட்டது. மேற்குறித்த பொறுப்பேற்றல் விடயங்கள் பிரசித்த கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் இலக்கம் 3(1) மற்றும் 3(2) ஆகியவற்றின் கீழ் அசையும் மற்றும் அசையாத ஆகிய சகல சொத்துக்களுடனும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான இந்த வளாகத்தை 1991 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 08 ஆம் திகதி முதல் வ/ப மக்கள் உரத் தொழில்முயற்சிக் கம்பனிக்கு பசளைகளைக் கலக்கும் மற்றும் விற்பனை செய்யும் பொருட்டு உரிமை மாற்றிக் கையளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் இது சேதனப் பசளை உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வந்தது. பின்னர், இந்தத் தொழில்முயற்சி 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் மீண்டும் நிறுதப்பட்டுள்ளது.

12/1344/549/003-IV என்ற அமைச்சரவைப் பத்திரத்திற்கு இணங்க 2012.10.03 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வ/ப மக்கள் உரத் தொழில்முய்றிசிக் கம்பனியை தன்னார்வ ரீதியில் ஒழித்துக்கட்டுவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு நிதியம்

# வனசீவராசிகள் பொறுப்பு நிதியம்

## நோக்கங்கள்

- இலங்கையின் இயற்கை மரபுரிமைகளின் சுற்றாடல் மற்றும் பொருளாதார விழுமியங்களைப் பாதுகாத்து அவற்றை மேம்படச் செய்தல்
- வனசீவராசிகள் மற்றும் சுற்றாடல் கல்வி விடயங்களைப் பிரபல்லியப்படுத்துதல்
- இலங்கையின் வனசீவராசிகள் பாதுகாப்பு விடயங்களுக்கு உதவுதல்
- வனப் பாதுகாப்பு வலயத்தை அண்மித்திருக்கின்ற மக்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- வனசீவராசிகள்/சுற்றாடல் பற்றிய சட்டங்களை தேவையானவாறு பிரபல்லியப்படுத்துதல்
- சுற்றாடல் சுற்றுலா வசதிகள், தொடர்பாடல் விடயங்கள் என்பவற்றை பேணிச் செல்லலும் ஒழுங்கமைத்தலும்
- இயங்கையின் இயற்கை மற்றும் கலாச்சார மரபுரிமைகளின் விழுமியங்கள் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச புரிந்துணர்வை மேம்படுத்துதல்

## நிருவாகம்

இந்த வனசீவராசிகள் பொறுப்பு நிதியம் 10 அங்கத்தவர்கள் அடங்கிய ஒரு பொறுப்பு சபையினால் நிருவகிக்கப் படுகின்றது. உத்தியோகபூர்வத் தவிசாளர் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர், வனப் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம், நிதி அமைச்சின் பிரதிநிதி, இலங்கைச் சுற்றுலா சபையின் பிரதிநிதி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிநிதி, அரச சார்பற்ற நிறுவனங்களின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகத் துறையில் இரண்டு நபர்கள் ஆகியோர் இந்தப் பொறுப்பு நிதியத்தின் அங்கத்தவர்களாவர்.

## வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் வருமான வழிகள்

வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் சகல கருமங்கள் தொடர்பிலும் வருமானத்தை ஈட்டவேண்டியுள்ளது. இதன் பிரகாரம் தற்பொழுது 4 முக்கிய வருமான வழிகள் கண்டறியப்பட்டுள்ளன.

- நிதியத்தின் முதலீடு
- இரந்தினிகல பயிற்சி நிலையத்தின் வசதிகளை வாடகைக்கு விடுதல்
- சுற்றாடல் சுற்றுலா விடயங்கள்
- விற்பனைச் செயற்பாடுகள் (தொடர்பாடல் பொருட்கள் முதலியன)

பாதுகாப்பு சார்ந்த சேவைகளை அதிகரிக்கும் விடயம் வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் வருடாந்த வருமான அதிகரிப்பில் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது.

## வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களும் சேவைகளும்

வனசீவராசிகள் பொறுப்பு நிதியம் தனது வருடாந்த வருமானத்தில் ஏறக்குறைய 50% வீதம் பல வகையான பாதுகாப்பு சார்ந்த சேவைகளைப் பேணிச் செல்வதற்காகச் செலவு செய்யப்படுகின்றது. இவற்றில் பின்வரும் சேவைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

- **சமுதாயக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்**

நடமாடும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், வேலையரங்குகள், மூன்று நாள் வதிவிடக் கல்விச் சுற்றுலா மற்றும் ஆறு மாத வனசீவராசிகள் பாதுகாப்புச் சான்றிதழ் பாடநெறி என்பன இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் அடங்கும். இது தவிர பல விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தினால் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

- **பாடசாலைக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் சுற்றாடல் விடயங்களும்**

இந்த நிகழ்ச்சித்திட்டம் வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் ஒரு முதன்மை நிகழ்ச்சித்திட்டமாகும். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பல்லுயிரினத் தன்மை சார்ந்த விழுமியங்களையுடைய வனசீவராசிகள் பாதுகாப்பு வலயத்தை அண்மித்த பாடசாலைகள் தொடர்பில் இதன் கீழ் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. வனசீவராசிகள் பாதுகாப்பு வலயத்தை அண்மித்திருக்கின்ற பாடசாலைகளின் செயற்பாடுகளை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரை இணைத்துக்கொண்டு அவர்களின் அடிப்படை ஒத்துழைப்பு மற்றும் திட்டமிடல் ஆகியவற்றின் கீழ் குறுங்காலச் செயற்பாடுகளின் மூல கற்கைத் திட்டங்களினூடாக இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

- **சமுதாய அமைப்புகளின் வலிமைகளை மேம்படச் செய்தல்**

வனசீவராசிகள் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள மக்களினதும் அதனை அண்மித்த பகுதி மக்களினதும் அபிவிருத்திச் செயற்பாடுகளை நோக்கமாகக் கொண்ட சமூகமய நடவடிக்கைகளை மேம்படச் செய்வது இந்தச் செயற்பாடுகளில் அடங்கும்.

- **ஆராய்ச்சி நடவடிக்கைகள்**

(ஒரு செயல்முறைப் போக்குடன்) இதன் கீழ் உரிய துறைகளினுள் பல மட்டங்களிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு உதவுதல். குறிப்பாக பல்கலைக்கழக மட்டத்தில் பட்டதாரி மாணவர்கள், பட்டப்பின்படிப்பு மாணவர்கள் ஆகியோருக்கு ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பிலும் மற்றும் உயர் தர மாணவர்களுக்கு கருத்திட்டச் செயற்பாடுகள் தொடர்பிலும் உதவுதல்.

- **தொடர்பாடல் செய்திப் பிரிவின் கருத்திட்டங்கள்**

வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் விற்பனை நிலையங்களின் வெளியீட்டுப் பணியகம், வெளியீட்டுப் பிரிவு ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட பணியகங்கள் இவற்றில் அடங்கும். தற்பொழுது இந்த வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தினால் 7 தகவல் தொடர்பாடல் மற்றும் விற்பனை நிலையங்கள் மிகவும் வெற்றிகரமான முறையில் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

**2012 ஆம் ஆண்டின் வருமானம்**

| நிறுவனம் | நிதி (ரூ.) |
|---|---|
| தலைமை அலுவலகம் | 301,020.00 |
| இரந்தெனிகல பயிற்சிக் கேந்திர நிலையம் | 390,917.00 |
| யால தேசிய சரணாலயம் | 915,275.00 |
| லுனுகம்வெஹர தேசிய பூங்கா | 16,475.00 |
| மத்திய சுற்றாடல் அதிகார சபை | 75,478.00 |
| உடவளவை அத் அத்துரு செவன | 86,695.00 |
| வில்பத்து தேசிய சரணாலயம் | 147,535.00 |